பதிவு எண் 2041. மகாத்மா காந்தி வாழ்க. தனிப்பிரதி விலை அணு ஒன்று





| | ரூ. அ. |
|---|---|
| வருட சந்தா ... ... ... | 3—0 |
| 6 மாத சந்தா ... ... ... | 1–12 |

[வாரப்பதிப்பு.]

ஆசிரியர்
ஈ. வெ. இராமசாமி நாயக்கர்

| | ரூ. அ. |
|---|---|
| வெளி நாட்டிற்கு சந்தா ... | 4—0 |
| விளம்பரம் அங்குலம் 1-க்கு ... | 0—8 |

மாலை 2 | ஈரோடு, அக்ஷய-வரு ஆடி-மீ 3-உ (18—7—26) ஞாயிற்றுக்கிழமை. | மலர் 12.



## உண்மையான கதர்

கெட்டியான கதர்!

கதர் வாங்குகிறவர்கள் விலையை கவனிப்பதுடன் சரக்கு அழுத்தத்தையும், சுயத்தையும், கெட்டியையும் கவனிக்கவேண்டியது முக்கியமான கடமை. தமிழ் நாடுகாங்கிரஸ் கதர் போர்டாரின் உதவியாலும் மேற்பார்வையாலும், அத்தாட்சி பத்திரத்துடன் நடைபெறுகின்றது கதர் போர்டாரின் விலைக்கே விற்கப்படும்.

(காங்கிரஸ் அத்தாட்சிப் பத்திரம்.

ஸ்ரீ காந்தி கதராலயத்தார் கை நூலால், கைத் தறியால் தயார் செய்யப்பட்ட உண்மையான கதர் உற்பத்தி செய்து நியாயமான விலைக்கு விற்கிறார்கள். எஸ். ராமநாதன்,

காங்கிரஸ் கதர் போர்டு காரியதரிசி.

விலாசம்:—ந. ராமசாமி. மானேஜர்,
ஸ்ரீ காந்தி கதராலயம், திருப்பூர்.

## கதர்! கதர்!! கதர்!!

தமிழ் நாடு கதர் போர்டாரால்
அத்தாக்ஷி பத்திரம் பெற்ற

**சுத்த கதர் ஜவுளிகள்.**

வெள்ளை பீஸ்கள், வேஷ்டிகள், துண்டுகள், துவால்கள், சால்வைகள், அச்சு துண்டுகள், பலரகம் வெள்ளை கலர் கோட்டிங்குகள், சீட்டிகள் எல்லா ரகங்களும் கைவசம் இருப்பிலிருக்கின்றன. விலை சாப்தாவுக்கு கீழ் கண்ட விலாசத்திற்கு எழுதவும்.

S. திருமலைசாமி செட்டி,
A. முருகேச முதலி.
No. 12 கச்சேரி வீதி, திருப்பூர்.

## காங்கிரஸ் அத்தாக்ஷி பெற்ற சுத்த கதர்.

தமிழ்நாடு காங்கிரஸ் கதர் போர்டின் விலைக்கே விற்கப்படும். எல்லா ரகங்களும், கிடைக்கும் விலை ஜாபிதாவுக்கும் மற்ற விபரங்களுக்கும், கீழ் கண்ட விலாசத்துக்கு எழுதவும். சாம்பிள் (மாதிரிக்கு) ¼ அணா ஸ்டாம்பு அனுப்பவும்.

கற்பக விநாயகர் கதர் நிலயம்.
ஊத்துக்குளி S. I. Ry.

## மூன்று மாதத்தில் மோட்டார் ஓட்ட கற்றுக் கொள்ளலாம்.

1916-வரு ஸ்தாபிக்கப்பட்டது.

எங்கள் கம்பெனியில் மோட்டார் வண்டிகளை ஓட்டவும், பிரிக்கவும், பூட்டவும் வேறு பல சீர் திருத்தங்கள் செய்யவும் கற்றுக் கொடுக்கப்படும். தேர்ச்சியடைய மூன்று மாதம் ஆகும். தேர்ச்சி அடைந்த பின்பு கவர்ன்மெண்டு லைசென்சும் எமது கம்பெனி சர்ட்டிபிகேட்டும் கொடுக்கப்படும்.

மற்ற விபரத்திற்கு நேரில் எழுதி தெரிந்துகொள்ளலாம்.

மதருஸ் தென்னிந்தியா
மோட்டார் இன்சினீயரிங் ஒர்க்ஸ்,
மைலாப்பூர்-மதருஸ்.

## திருப்பூர் சுத்த கதர் ஜவுளிகள்.

பலரகம் வேஷ்டிகள், துண்டுகள், வெள்ளை பீஸ் ரகங்கள், ஷர்ட்டிங், கோட்டிங், சீட்டி தினுசுகள், தாவணிகள், சுங்கடி சேலைகள் இன்னும் அநேக தினுசுகள் எங்களிடத்தில் கிடைக்கும். தேவைக்கு ஆர்டர் செய்யுங்கள். வி. பி. அனுப்ப முடியாத வெளிநாடுகளுக்கு முழுத் தொகையையும் முன் பணமாக அனுப்பவேண்டும்.

(அத்தாட்சி பத்திரம்.)

ஸ்ரீமான் ஆர். எம். எஸ். சிதம்பரம் செட்டியார், முத்துசாமி செட்டியார் கைநூலால் கைத்தறியால் தயார்செய்யப்பட்ட சுத்த கத்தர் துணிகளையே உற்பத்திசெய்து நியாயமான விலைக்கு விற்றுவருகிறார்.

S. இராமநாதன்: காரியதரிசி, கத்தர்இலாகா

விலாசம்:—

ஆர். எம். எஸ் சிதம்பரம் செட்டியார்,
முத்துசாமி செட்டியார்,
கத்தர் டிப்போ, திருப்பூர். (தென் இந்தியா)

## கத்தர் வியாபாரிகளுக்கு அறிக்கை.

தமிழ்நாடு கத்தர் போர்டின் அத்தாட்சிப்பத்திரம் பெற்றிருக்கிறது. எங்கள் கதர் ஸ்டோரில் எல்லா விதமான தினுசுகளும் தயாராகிறது. கதர் போர்டின் விலைக்கே கொடுக்கிறோம். அட்வான்சுடன் ஆர்டர் அனுப்புங்கள்.

கே. எஸ். ஆர். எம். ராமசாமி செட்டியார்,
கத்தர் ஸ்டோர் அமராவதிபாளையம்,
பொன்னுக்காளிபாளையம் போஸ்டு,
(திருப்பூர் மார்க்கம்.)

## அகமுடையார் குல மகாநாடு.

### திருத்தருப்பூண்டியில் கூடிய அகமுடைய குலத்தவர் மகாநாட்டில் நிறைவேறிய தீர்மானங்கள்.

**1.** இம் மகாநாட்டார் தமது ராஜவிசுவாசத்தை அரசர் பெருமானுக்குத் தெரிவித்துக்கொள்ளுகிறார்கள்.

**2.** இம் மகாநாட்டார் திருவாரூர் மகாரதம் எரிந்து போனதைப்பற்றி தங்கள் வருத்தத்தைத் தெரிவித்துக்கொள்வதோடும் மகா ரதம் உண்டுபண்ண எல்லோரும் முயற்சிசெய்து உதவிபுரியுமாறு கேட்டுக்கொள்ளுகிறார்கள்.

**3.** (a) இம் மகாநாட்டார் அகமுடையர்களுக்குப் பொதுவாக மகா சபையொன்று ஏற்படுத்த வேண்டும் என்றும் அதற்கு ஒவ்வொரு ஜில்லாக்களிலும், தாலூகாக்களிலும், கிராமங்களிலும் கிளைச் சபைகள் ஏற்படுத்த வேணுமென்று கேட்டுக்கொள்ளுகிறார்கள்.

(b) தஞ்சை ஜில்லா அகமுடையர் சங்கம் (Tanjore District அகமுடையர் சங்கம்) என்னும் பெயரால் ஒரு சங்கம் ஸ்தாபித்து ரிஜிஸ்டர் செய்துகொள்ளும்படிக்கும் அதற்கு தாலூகா, கிராமங்கள் தோறும் கிளைச்சங்கங்கள் ஸ்தாபிக்கவும் இம் மகாநாட்டார் தீர்மானிக்கிறார்கள்.

(c) அடியிற் கண்ட விதிகளை மேற்கண்ட தஞ்சை ஜில்லா சங்கத்தின் விதிகளாக இம் மகாநாட்டார் அங்கீகரிக்கிறார்கள்.

**4.** நமது குலத்தினர்கள் உள்ள ஒவ்வொரு கிராமங்களிலும் கல்விச்சாலை ஏற்படுத்த முயலவேண்டுமெனவும் குறைந்தது 12 வயது வரையிலாவது பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளை கல்விச்சாலைக்கு அனுப்புமாறும் நமது குலத்தினர்களை இம் மகாநாட்டார் கேட்டுக்கொள்ளுகிறார்கள்.

**5.** (a) நமது குலத்து மாணவர்கள் பட்டணங்களில் தங்குவதற்கும், உணவு உண்பதற்கும் வசதியில்லாத குறையினால் உயர்தரப் படிப்புப் படிக்க முடியவில்லை. ஆதலால் நமது குலத்தினர் அதிகமாயிருக்கும் பிறதேசங்களிலுள்ள பட்டணங்களில்மாணவர் விடுதிகளாக்கி அதற்கு நமது குலத்தினர் உதவி புரியும்படி இம் மகாநாட்டார் கேட்டுக்கொள்ளுகிறார்கள்.

**6.** (a) நமது குலத்தினர் பெரும்பான்மையுள்ள இடங்களில் சட்டசபை, ஜில்லா போர்டு, தாலூகா போர்டு முதலிய பொது ஸ்தாபனங்களில் தேருதல்மூலமாக ஸ்தானம்பெற நமது குலத்தினர் முயற்சிக்க வேணுமென்றும் அதற்கு நமது, குலத்தினர் எல்லோரும் சேர்ந்துழைக்க வேண்டுமென்றும் இம் மகாநாட்டார் கேட்டுக்கொள்ளுகிறார்கள்.

(b) நமது குலத்தினர் சிறுபான்மையுள்ள இடங்களில் பொது ஸ்தாபனங்களில் நமது குலத்தினர்களுக்கு நியமனமூலமாக ஸ்தானங்கள் கொடுக்க வேணுமென்று அரசாங்கத்தை இம் மகாநாட்டார் கேட்டுக்கொள்ளுகிறார்கள்.

(c) நமது குலத்தில் படித்த வாலிபர்களுக்கு உத்தியோகங்களுக்குத் தக்கவாறு சர்க்கார் உத்தியோகம் கொடுக்கவேண்டுமென இம்

கணக்கில்லா நற்சாக்ஷிப் பத்திரம் பெற்றது.

**அயன் மஹா மூலிகை சந்தனாதி தைலம்.**

சிரசைப் பற்றிய நோய்களுக்கு தேவாமிர்தம் போன்றது.

உஷ்ணமான **வேலைக்காரர்களுக்கும்** உஷ்ணதிரேகி, மாணுக்கர், வக்கீல், ஜட்ஜுகள் **முதலியோர்** பலரும் உபயோகித்து வருகின்றனர்.

பரிமள மணமும் சிறந்த குண முடையது. பத்தியமில்லை.

கண்ணெரிவு, கண் சிகப்பு, **கண் கூச்சம், கண்ணில் நீர் வடிதல், பார்வைக்** குறைவு, பித்த மயக்கம், பயித்தியம், ஞாபகக் குறைவு, அஸ்திகாங்கை, மூலச்சூடு, நீர் எரிவு, நீர்க் கடுப்பு, தாகம், நித்திரை பங்கம், பூச்சி வெட்டு, வழுக்கை, மண்டைக் குத்தல், ஒருத்தலைவலி, தலைச்சொறி, காதுவலி, காதுகுத்தல், மயிர்ப் பிளவு, மயிர் உதிர்தல் செம்பட்டை, ஆரம்ப நரை, தேகநாற்றம், முதலிய வியாதிகளைப்




போக்கி உரோமத்தை கருக்கச் செய்யும் திறமை வாய்ந்த தைலம் இது ஒன்றே.

12-அவுன்ஸ் பாட்டில் 1-க்கு விலை ரூ. 1-8-0

24-அவுன்ஸ் பாட்டில் 1-க்கு விலை ரூ. 3-0-0

வாரம் இரு முறை எண்ணெய் ஸ்நானத்திற்குப் பதிலாக உபயோகிப்பதுடன் அனுதினமும் தலைவாரிக் கொள்ளலாம்.

| | |
|---|---|
| 40 வகை பித்தத்திற்கும் ஜீரக ரசாயனம் 2-சேர் | ரூ. 2—0—0 |
| இரத்த விருத்திக்கு வீரிய தாது லேகியம் 1-சேர் | ரூ. 2—0—0 |
| பாலர் ரக்ஷணி நான்கு வகை மாத்திரை 200-க்கு | ரூ. 2—0—0 |
| சுக பேதி மாத்திரை அல்லது இரா பேதி 100 மாத்திரை | ரூ. 1—0—0 |
| சுக பேதி பவுடர் 100 வேளைக்கு | ரூ. 1—0—0 |
| ஓம சத்து அரை அவுன்ஸ் புட்டி 1-க்கு | ரூ. 1—0—0 |
| காலரா சஞ்சீவி திராவகம் 1-அவுன்ஸ் புட்டி 1க்கு | ரூ. 2—0—0 |
| காது நோய்க்கு கர்ண பிந்து 1-அவுன்ஸ் புட்டி 1-க்கு | ரூ. 1—0—0 |
| சோகை பாண்டுகளுக்கு அய காந்த சத்து 40 வேளைக்கு | ரூ. 1—0—0 |

குறிப்பு:— இன்னும் எல்லா வியாதிகளுக்கும் கை கண்ட மருந்துகள் நேரிலாவது தபால் மூலமாவது பெற்றுக் கொள்ளலாம். எனது தரும வைத்திய சாலையில் இவ் வருடம் 15000 வியாதியஸ்தர்களுக்கு மருந்து கொடுத்து சகல வியாதிகளையும் குணப்படுத்தி இருக்கிறேன். திருச்சியிலே பிரபல தன வந்தர்களின் குடும்பங்களுக்கு குடும்ப வைத்தியாக இருந்து வருகிறேன்.

டாக்டர். ஜீ. எல். சாமி,

சத்திய வேத வைத்தியசாலை, வரகனேரி—**திருச்சினாப்பள்ளி.**

மகாநாட்டார் அரசாங்கத்தாரைக் கேட்டுக்கொள்ளுகிறார்கள்.

**7.** சமீபத்தில் திருத்தருப்பூண்டி தாலூகா போர்டாரால் நிர்ணயிக்கப்பட்ட தொகுதிப் பிரிவினையானது நியாய விரோதமாகவும் எதேச்சையாகவுமிருப்பதுடன் முக்கியமாக இந்த தாலூகாவிலுள்ள நமது குலத்தினர்களுக்கு தீங்கு இழைப்பதாக இருப்பதால் அந்த பிரிவினையை நிறைவேற்றாமல் இருக்கும்படி ஜில்லா போர்டு மெம்பர்களையும் அரசாங்கத்தாரையும் நம் மகாநாடு கேட்டுக்கொள்ளுகிறது.

**8.** நமது குல மாணவர்களுக்கு அரைச் சம்பளத்தில் படிக்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று இம் மகாநாட்டார் பள்ளிக்கூட அதிகாரிகளையும் ஜில்லா போர்டாரையும் அரசாங்கத்தாரையும் கேட்டுக்கொள்ளுகிறார்கள்.

**9.** (a) நமது குலத்தினர்கள் உள்ள கிராமங்களில் எல்லாம் ஐக்கிய சங்கங்கள் ஸ்தாபித்து விவசாயம், கைத்தொழில் முதலியவைகளை விருத்திசெய்யவேண்டிய முறைகளைக் கையாளும்படிக்கும் அப்படிப்பட்ட சங்கங்களுக்குப் பொருள் உதவி செய்யத்தக்கதாக அகமுடையார் சங்கத்திற்கென்றே ஒரு பொது பாங்கி ஏற்படுத்த வேண்டும் என்றும்,

(b) இச் ஜில்லாவில் இம் முயற்சிகள் சீக்கிரத்தில் பரப்புவதற்காக அகமுடையார் ஒருவரை கௌரவ உதவி ரிஜிஸ்டராக நியமிக்க வேண்டுமென்றும் டெவலப்மெண்டு இலாக்கா மந்திரி அவர்களுக்கு விண்ணப்பித்துக்கொள்ள இம் மகாநாட்டார் தீர்மானிக்கிறார்கள்.

**10.** நமது குலத்தினர் நாட்டுக் கைத்தொழில்களை விருத்தி செய்து ஆதரிக்கவேணுமென்றும் நமது குலத்தினர் நாட்டில்செய்த சாமான்களை வாங்க வேண்டுமென்று இம் மகாநாட்டார் தீர்மானிக்கிறார்கள்.

11. நமது சங்க வாயிலாக ஒரு பத்திரிகை ஆரம்பித்து நடத்தவேண்டும் என்றும் இம்மகாநாட்டார் அபிப்பிராயப்பட்டிருக்கிறார்கள்.

12. தமிழ் மொழி வளர்ச்சிக்காக கூடிய சீக்கிரத்தில் தமிழ் பல்கலைக்கழகம் ஸ்தாபிக்க வேண்டுமென்றும் அரசாங்கத்தாரை இம் மகாநாட்டார் கேட்கிறார்கள்.

## தமிழர் கடமை.

அரசியல் உலகிலே அடிக்கடி பலமாற்றங்கள் நிகழ்ந்து வருகின்றன. தந்தம் மனச்சான்று வழி நின்று உழைக்க விரும்பும் தேசபக்தர்கள் பார்ப்பனக் கட்சியாய சுயராஜ்யக்கட்சியினின்று விலகலும், பட்டம் பதவிகளை அவாவி நின்ற தன்னல மாளிக்கங்கள் அவை கிடைக்கப் பெறுமையான் பொறுமையிழந்தும் அழுக்காறினாலும் தம்மனச்சான்றுக்கு மாறாக பெருங் குடிமக்களின் கட்சியாய ஜஸ்டிஸ் கட்சியினின்று விலகலும்; பார்ப்பனக் கட்சித் தலைவர்களாய ஐயங்கார் கோஷ்டி இரகசியமாய்ச் செய்து வரும் அடாத செயல்களையும் தமிழ் மக்களை நசுக்குதற்கு விபீஷணாழ்வாரைப் போன்றிருக்கும் தமிழராய்ப் பிறந்த ஒரு சில கோடரிக் காம்புகளை உபயோகித்து செய்துவரும் சதியாலோசனைகளையும் அக்கட்சியினின்று விலகிய தேசபக்தர்கள் வெளியிடுவதும், ஜஸ்டிஸ் கட்சியார் அதைச் செய்யவில்லை இதைச் செய்யவில்லை சுயராஜ்யம் பெற சக்தியில்லை வெள்ளைக்காரர் தலைகளைவாங்க முடியவில்லை என்பதாக அழுக்காறு மிகுதியான் அக்கட்சியினின்று விலகிய விபீஷணாழ்வார் சுகவாழ்வார்களான ஒத்தக்காசு ஓட்டை உடைசல் செல்லாக்காசு செம்பு பித்தளைகள் "உடன் பிறந்தார் சுற்றத்தார் என்றிருக்க வேண்டாம், உடன் பிறந்தே கொல்லும் வியாதி" என்பதை மெய்ப்பிக்க திருஅவதாரம் செய்தவர்களாய்ச் சகோதரத் துரோகமும் இனத்துரோகமும் செய்து வருவதுமாயிருக்கின்றனர். இந்நிலையில் தமிழ் மக்களது கடமையாது என்பதை நாம் வெளியிட வேண்டியது முக்கிய கடனாகும்.

சட்டசபைத் தேர்தல் நெருங்கி வர வர தேர்தல் பிரசாரம் தீவிரமாய் நடைபெறுகின்றன. சென்னையிலே சின்னாட்களாக தேர்தல் பிரசாரக் கூட்டம் கூடாத நாளில்லையென்றே சொல்லலாம். சுயராஜ்யக் கட்சியென்னும் புனைப்பெயர் கொண்ட பார்ப்பனக் கட்சி தங்கள் தேர்தல் பிரசாரக் கூட்டத்தில், ஜஸ்டிஸ் கட்சியார் தேசத்தைக் காட்டிக் கொடுத்துவிட்டார்களென்றும் சுயராஜ்யந் தரும் வெள்ளைக்காரர்களுக்குக் குறுக்கே படுத்துக்கொண்டு சுயராஜ்யம் தாராமல் தடுத்துவிட்டார்களென்றும் நாட்டில் பஞ்சம் ஏற்பட்டதற்கும் வெய்யல் காய்த்து புல் பூண்டுகளை அழித்ததற்கும் வெள்ளம் பெருகி ஊர் உழவுகளை அழித்ததற்கும் ஜஸ்டிஸ் கட்சியாரே காரணமென்றும், மொட்டைத் தலைக்கும் முழங்காலுக்கும் முடிபோடுவதுபோல், அன்னக்காவடிகளையும், ஆஷாடபூதிகளையும் ஏவிவிட்டு தங்கள் கட்சிக்கு அனுகூலமாய்ப் பேசச்செய்து வருகின்றனர். "சுயராஜ்யக் கட்சியார் சொல்லுவதெல்லாம் பொய், இந்தியாவெங்கும் போற்றப்பெறும் ஹிந்துமத பரிபாலனச் சட்டத்தை நாங்களே நிறைவேற்றினோம். கோகலே முதலிய தவமணிகளாலும் செய்ய முடியா ஆரம்பக் கல்விச் சட்டத்தை நிறைவேற்றினவர்களும் நாங்களே, நாடெங்கும் கல்வி பெருகுதற்கு உதவியாய் கைத்தொழில் உதவிச் சட்டத்தையும் இன்னேன்னபிற நலன்களையும் நாங்களே செய்து வந்திருக்கின்றோம். பார்ப்பனரே ஏகபோகமாய் அனுபவித்து வந்த உத்தியோகங்களை ஹைகோர்ட்டு ஜட்ஜு பதவி முதல் அநேக பதவிகளை பார்ப்பனரல்லாதாரான தாழ்ந்த வகுப்பார் கிறிஸ்தவர் மகமதியர் இந்துக்கள் ஆகிய எல்லோரும் அனுபவிக்கச் செய்தோம். மேலும் சட்டசபையில் முட்டுக்கட்டை போடுகிறோமென்று சொல்லி ஓட்டுவாங்கிச் சட்டசபைக்குள் சென்றபின் சர்க்காரோடு ஒத்துழைத்தவர்கள் நாங்களல்ல, உண்மையைச் சொல்லி ஓட்டுவாங்கி உண்மையாகவே நடந்து வருகிறோம்" என்று ஜஸ்டிஸ் கட்சியார் தங்கள் பிரசாரக் கூட்டத்தில் சொல்லி வருகின்றனர். இருகட்சிக் கூட்டத்தாராலும் செய்யப்படும் பிரசாரக் கூட்டங்களுக்குச் செல்லும் பொது ஜனங்களின் தொகையைப் பார்ப்பதினாலும் பொது ஜனங்கள் அவ்வக் கூட்டங்களில் கேள்விகேட்டு பிரசங்கியாரைத் திணறச்செய்யும் மரியாதைகளைத் தெரிந்துகொள்வதினாலும் எக்கட்சியார் கூறுவது உண்மை, எக்கட்சியார் கூறுவது பொய், எக்கட்சிக்கு நாட்டில் செல்வாக்கிருக்கின்றது, எக்கட்சியினர் நாட்டாரால் அவமதிக்கப்படுகிறார், ஏளனம் செய்யப்படுகிறார் என்பதை பொது ஜனங்கள் உணர்ந்துகொண்டார்களென்றே அறிகிறோம்.

"வா வா மா போர்................" என்பதற்கொப்பாக சுயராஜ்யக் கட்சி நடந்து வருகிறது. ஆனால் சென்னையிலே நடைபெறும் பத்திரிகைகளில் பல பார்ப்பனர்களுடையதாயிருக்கின்றபடியால் சுயராஜ்யக் கட்சியின் ஊழல்களை பொது ஜனங்கள் உணராவண்ணம் அவைகள் செய்துவிடுகின்றன. சுற்றுப்புற நகரங்களிலும் கிராமங்களிலுமுள்ள தமிழ் மக்களிற் பலர் பார்ப்பனமித்திரனைப் "சுதேசமித்திர"னையும் பார்ப்பனராஜ்யமாகிய "சுயராஜ்யா"வையும் வாங்கிப்படித்து வருகிறார்களே யன்றி, தங்கள் நலத்துக்கும் குலத்துக்கும் என்றே தோன்றியதும் ராது, கேவலமான "சுயராஜ்யா" "சுதேசமித்திரன்" பத்திரிகைகளால் இடையறாது தாக்கப்பெறுவதுமான "திராவிடன்" பத்திரிகையை வாங்கிப் படிப்பதில்லை. இவ்வாறு இவர்கள் பார்ப்பனக் கட்சியாய சுயராஜ்யக் கட்சியை ஆதரிக்கும் பத்திரிகைகளைமட்டும் பார்த்து வருவதால் இவர்களுக்கு ஜஸ்டிஸ் கட்சியின் உண்மை புலனாகாமற்போவதோடு இவர்கள் அப்பத்திரிகைகளில்காணப்பெறும் ஜஸ்டிஸ் கட்சிக்கு விரோதமான பொய்மை நிறைந்த கருத்துகள் இவர்கள் மனதில் படிந்து விடுகின்றன. இவ்விதச் செயல்களினாலேயே பல தமிழர்கள் ஜஸ்டிஸ் கட்சியின் நன்மையை அறியாமல் அக்கட்சிக்கு விரோதமான மனோபாவனைகொண்டவர்களாக இருக்க நேருகிறது.

எக்கட்சியார் சொல்வது பொய் எக்கட்சியார் சொல்வது மெய் எக்கட்சியார் செய்வது நமக்கு நன்மை எக்கட்சியார் செய்வது தீமை என்பதையும், எக்கட்சியில் உண்மையாளர்களும் யோக்கியர்களும் தியாகிகளும் பேசுகின்றனர் என்பதையும் காண விரும்புவோர் "திராவிடன்" பத்திரிகையை வாங்கிப்படிக்கவேண்டியது அவரது கடமையாகும். சுயராஜ்யக் கட்சியார் தங்களுக்கு ஓட்டுக் கேட்குங்கால் சிறை சென்றவர்கள் பெயரையும் தன்னை அடுத்த தேசபக்தர்கள் பெயரையும் மகாத்மா காந்தியின் பெயரையும் சொல்லி ஓட்டுக்கேட்கின்றார்கள். ஆனால் ஜஸ்டிஸ் கட்சியார், தாங்கள் செய்த நன்மைகளையும் பார்ப்பனர்கள் தங்களுக்கு இன்னின்ன வகையில் இடர் விளைத்து தாங்கள் நாட்டிற்கு செய்யவிருந்த நன்மைக்கு அவர்கள் தடைகல்லாய் விளங்கின தன்மையையும் பொது மக்கள் முன் விளக்கி ஓட்டுக் கேட்கிறார்கள். ஆகவே "திராவிட"னையும் "சுதேசமித்திர"னையும் ஒருங்கே வைத்து இருசாரரும் பேசும் சொற்களையும் கூறும் சான்றுகளையும் விட்டு விட்டு, சுயராஜ்யக் கட்சியில் பேசிய சொற்பொழிவாளர்களையும் அவர்களுடைய தன்மையையும், ஜஸ்டிஸ் கட்சியில் பேசிய சொற்பொழிவாளர்களையும் அவர்களுடைய தன்மையையும் கவனிப்போமானால் இழிந்த தன்மையுடையார் எவர் உயர்ந்த தன்மையுடையார் எவர் என்பது விளங்கும். சுயராஜ்யக் கட்சியின் சார்பாகப் பேசுவோரிற் பலர் இதுவரை அரசியல் உலகிலேயே கேள்விப்படாதவர்களும், "திராவிடன்" சொல்லுவதுபோல், வயிற்றுச் சோற்றுக்கும் உப்புமா காப்பிக்கும் வீட்டு வாடகைக்கும் டிராம் வண்டிச் செலவுக்கும் வயிற்றுப்பிழைப்பிற்குப் பத்திரிகை நடத்துவதற்கும் ஐயங்காரை அண்டிப் பார்க்கும் அநாமதேயங்களையும் அன்னக்காவடிகளையுமே காணலாம். ஜஸ்டிஸ் கட்சியின் சார்பாகப் பேசுபவரில் பலர் அசக்ய மூர்த்தி முதலியோர் அரசியல் பள்ளியில் அரிவரி படிப்பதற்கு முன்னமேயே, நெடுங்காலமாகக் காங்கிரஸில் நன்கு உழைத்து பெருந் தியாகம் செய்தவர்களும் சிறை சென்றவர்களும் என்பதையும் "திராவிட"னைப் படிப்பதினின்று தெரிந்துகொள்ளலாம். "குடி அரசு" போன்ற இந்த இரண்டொரு பத்திரிகையும் இதுபோழ்து நமது நாட்டில் இல்லாதிருக்குமேல் பார்ப்பனரல்லாதார் நிலை இன்று எவ்வாறிருக்கும்? பார்ப்பனரல்லாதார் ஐந்து பேர் தெருவில் கூடி பேசினால் அஃது சட்டவிரோதமான கூட்டமென்றல்லவோ நமது பார்ப்பன சட்டமெம்பர்களும் அட்வொகேட் ஜனரல்களும் சட்டம் செய்திருப்பார்கள்? கல்பாத்தி ஒன்றே இதற்கு சான்றுபோதாதா? சென்னை ஜஸ்டிஸ் கட்சி கூட்டங்களில் 1000, 2000, 5000 மக்கள் குழுமினாலும் அவற்றை 100, 200, பேர் கூடினரென்று எழுதுவதும், பார்ப்பனக் கட்சியாய சுயராஜ்யக் கட்சி கூட்டங்களில் 50 100 பேர் வந்திருந்தாலும் 1000, 2,000 பேர் கூடிய பெருங்கூட்டம் என்று எழுதுவதும் "மித்திரன்", "சுயராஜ்யா" பத்திரிகைகளின் பிறவிக் குணமாகி விட்டது. அல்லாமலும் சில போக்கிரிகளுக்கும் சோம்பேறித் தடியர்களுக்கும் பணம் கொடுத்து ஜஸ்டிஸ் கட்சி கூட்டங்களில் கலகம் செய்யச்சொல்லிவிட்டு, அவைகள் "ஜஸ்டிஸ் கட்சியை பொது ஜனங்கள் விரும்பவில்லை" என்று எழுதுவதும், சுயராஜ்யக் கட்சியாரது அயோக்கியத்தனத்தையும் சூழ்ச்சியையும் பொய்மையை;

ம் பித்தலாட்டங்களையும்எவரேனும் அறிந்து அவர்களது கூட்டங்களில் ஏதாவது கேள்வி கேட்பரேல் மூட்டையை சுருட்டிக்கொண்டு பிரசங்க மேடையினின்று ஓட்டம்பிடித்து விட்டு, இவர்கள் ஓடுவதற்குக்காரணம் "ஜஸ்டிஸ் கட்சியைச் சேர்ந்த விஷமிகளின் வேலை, காலிகளின் வேலை" என்றும் கூட்டத்தில் பேசாததையும் நடக்காததையும் எழுதுவதும், ஜஸ்டிஸ் கட்சிக் கூட்டத்தில் பார்ப்பனர்கள் கலகம் செய்வார்கள் என்று நினைத்து எவரேனும் போலீசார் வந்திருந்தால் அப்பார்ப்பனப் பத்திரிகைகள் "ஜஸ்டிஸ் கட்சியார் அதிகாரவர்க்கத்தை துணைக்கழைக்கிறார்கள்" என எழுதுவதும், போலீஸார் பார்ப்பனக் கட்சி கூட்டங்களுக்குவராவிட்டால் "வரி கொடுப்போரின் பணத்தை வாங்கித் தின்றுகொண்டு போலீசார் தங்களுக்கு உதவிபுரிய வரவில்லை" என்று ஒப்பாரிவைத்தழுது எழுவதுமாயிருக்கின்றன.

இவைகளின் உண்மைகளை பொதுமக்கள் அறியவேண்டுமானால் அவசியம் ஒவ்வொரு தமிழ் மகனும் "திராவிடன்" பத்திரிகையை வாங்கிப்படிக்க வேண்டும். நமது பார்ப்பன விரோதிகள் ஜஸ்டிஸ் கட்சியார்பேரில் சொல்லும் ஒவ்வொரு பழிக்கும் இழிவு பிரசாரத்திற்கும் பொய்க்கும் புரட்டுக்கும் சூழ்ச்சிக்கும் தந்திரத்திற்கும் "திராவிட"னில் சரியான பதில்,உண்மையான சமாதானம்,சத்தியமானவாக்கு முதலியன காணலாம். அவ்வாறின்றி பார்ப்பனர் சொல்லும் பழிகளைமாத்திரம் பார்த்துவிட்டு ஒரு கூட்டத்தார்மேல் தப்பபிப்பிராயம் கொண்டு தனது குலத்திற்கே தீங்கு தேடிக்கொள்வது அறிவுடைமை ஆகாது. ஆகவே தமிழ் மக்கள் ஒவ்வொருவரும் தேர்தல் தீரும்வரையாவது "திராவிடனை" வாங்கிப்படித்து வரவேண்டியது அவர்களைப்பொறுத்த கடனாகும். இப்பத்திரிகை தினசரித் தாளாயிருந்தும் அதன் சந்தாவை ஏஜண்டு உள்ள நகரங்களுக்கு ரூபாய் ஒன்றும் ஏஜண்டு இல்லாத இடங்களுக்கு ரூபாய் 1—6—0-ம் வைத்திருக்கிறார்கள். தேர்தல் தீரும்வரை அதைத் தருவித்தற்கு ஐந்து ரூபாய்க்கு மேற்படாது. இந்த ஐந்து ரூபாவில் எவ்வளவு விஷயம், எவ்வளவு உண்மை, எவ்வளவு அரசியல் ஞானம், எவ்வளவு பார்ப்பனப் புரட்டு ஆகிய இவைகளை அறிந்து கொள்ளலாமென்பதை தமிழர் சிறிது சிந்திப்பாராக. நகரமுதற் தனித்த குக் கிராமங்களீறாக "திராவிடன்" "குடி அரசு", ஆகிய இருபத்திரிகைகளை ஒவ்வொரு தமிழரகத்துள்ளும் புக, இப்பொழுது இவ்விரண்டு பத்திரிகைகளின் சந்தாதாராய் உள்ளோரும் மற்றைய தமிழரும் தக்க ஏற்பாடு செய்ய வேண்டுகிறோம். கடைசியாக மீண்டுமொருமுறை "திராவிடன்" பத்திரிகைக்குச் சந்தாதாராய்ச்சேரவேண்டியதே தமிழரின் கடமையென தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

பார்ப்பனர்களால் நசுக்குண்டு கிடக்கும் ஏழைத் தமிழ் மக்கள்.

---

### விருதுநகர் திரு. கந்தசாமி நாடார்.

விருதுநகர் திரு. கூ. கு. மு. அ. சி. வெயில் முத்துசாமி நாடாரின் தமையனார் திரு. கந்தசாமி நாடார் சென்ற ஆனி-மீ 24-உ இரவு விண்ணுற்ற செய்தி கேட்டு வருந்துகிறோம்.

## "அரசியல் கட்சிகள்"

### ஏழை மக்களே ஏமாறுதீர்கள்.

ஆங்கிலம் பயின்ற திருக்கூட்டத்தார்கள் அந்நிய ஆட்சிக்கு அடிமைப்பட்ட நாட்டில் பல அரசியல் கட்சிகளை நிறுவிக்கொண்டிக்கிறார்கள். இக்கட்சிகள் யாவும் 'தன்னாட்சி' பெறுவதற்காகக் கோலியவழியென வாய்ப்பறை கொட்டுகிறார்கள். இக்கூட்டத்தார் கோலிய வழியில் உட்சென்று அகழ்ந்து நோக்கினால், பட்டத்திற்கெனவும், பதவிக்கெனவும், உத்தியோகங்களுக்கெனவும், நிறுவப்பட்ட கட்சியேயென யாரும் நன்கு தெரிந்துகொள்ளுவார்கள். ஏழை விவசாயிகளை—கடனில் மூழ்கி அலமலரும் விவசாயிகளை—ஏமாற்றி அன்னாரது வாக்குகளைப் பெற்று தங்கள் எண்ணத்தை முடித்துக்கொள்வான் வேண்டி நிறுவபட்ட கட்சியே என யான் அஞ்சாது அறைவேன். 'தன்னாட்சி' பெறுதற்கு என்று கட்சிகள் வகுத்து, ஏழைகளை ஏமாற்றும் அரசியல் வாதிகளை ஆழுத்தமாகக் கண்டிக்க வேண்டும். இன்று தோன்றி நாளை அழியும் கட்சிகளின் உள்கிடக்கையைநன்கு ஆராயவேண்டும், வாக்குப் பெறுவதற்கென கட்சிகள் வகுத்து வாக்குப் பெற்றனதும் அழியும் கட்சிகள் இவையென பொது மக்கள் தெரிந்துகொள்வான் வேண்டி நன்கு எடுத்துரைக்க வேண்டும்.

'தன்னாட்சி' என்பதையே குறிக்கோளாகக்கொண்டு என் இத்தனை கட்சிகள் தோன்ற வேண்டும்? ஒரே கட்சி போதாதோ? அநேக ஆண்டுகளாய் ஒத்துழைத்து ஒன்றும் பயன் இன்மையால் ஒத்துழையாமை தோற்றுவிக்கப்பட்ட தன்றோ? இவ்வொத்துழையாமை என்னும் சீரியவழியை கடைப்பிடித்து ஒழுகினால் தன்னாட்சி கிட்டாதோ? அந்நிய ஆட்சிக்குட்பட்டுக் கிடக்கும், நாட்டில் பல அரசியல் கட்சிகளை வகுத்தால், அதிகாரவர்க்கம் ஆக்கமுறுமே ஒழிய பொது மக்கள் ஆக்கமுறமாட்டார்கள். தற்கால அரசியல் வாதிகள் இவை தெரிந்திருந்து பல கட்சிகளை நிறுவுதற்குக் காரணம் என்னை? பதவி பட்ட உத்தியோக ஆசையன்றோ? ஆறு ஆண்டுகளாக நடந்த புதிய சட்டசபையினால் கிராமங்கள் எவ்வித பலனுமடையவில்லை. முன் இருந்த நிலைமைக்கு இது போழ்துள்ள நிலைமை பெரிதும் கேவலமாயிருக்கிறது. ஒத்துழையாக் காங்கிரஸ், அதிகாரவர்க்கத்தை நடுக்குறச் செய்த காங்கிரஸ் இப்பொழுது எங்கே? தன்னாட்சி பெறுவதே தலையாய நோக்கம் என முழங்கிய காங்கிரஸ் எங்கே?

சீரும் சிறப்பும் பொருந்திய காங்கிரஸ் மகாசபை, பட்டத்திற்கும், பதவிக்கும் ஆசை கொண்டுழலும் திருவாளர்களிடத்தில் அகப்பட்டுக்கொண்டது; ஏழை மக்களை உதறித் தள்ளிவிட்டது. இக்காங்கிரஸால், ஏழைமக்கட்குப் பயன் இல்லையாயினும் அன்னவரது உதவி பெரிதும் வேண்டுமென மனதிற்கொண்டு பொது மக்களை ஏமாற்றும் முடிவுக்கு வந்திருக்கிறது.

சட்டசபைக்குப் போய் முட்டுக்கட்டை போட்டு அதிகாரவர்க்கச் சக்கரத்தை ஓடாமல் செய்து விடுவோம், பின்னை நாட்டில் சட்ட மறுப்பும் வரிகொடா இயக்கமும் தொடங்குவோம், எனச்சொன்னார்கள். இவ்வெண்ணங்கள் சிறிய எண்ணங்கள் என்பதை நாமும் ஒப்புக்கொள்ளுகிறோம். சட்டசபையில் முட்டுக்கட்டைபோட்டு அதிகாரச் சக்கரத்தை நிறுத்தமுடியுமா? சட்டமறுப்பும்,வரிகொடா இயக்கமும்,தொடங்குவதற்கு தற்கால காங்கிரசுக்கு ஆற்றலுண்டா? என்பதைக் கவனிப்போம்.

தமிழ் நாடு காங்கிரஸ் கமிட்டியால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசியல் வாதிகள், சட்ட மறுப்பு செய்ய ஒருப்படுவார்களா? அஞ்சா நெஞ்சமுள்ள அரிமாக்களின் பின்னால் வருவார்களா?

சட்ட மறுப்பு வரிகொடாமை இரண்டையும் காங்கிரஸ் ஏற்று நடக்கத் தொடங்கினால் இந்நரிமாக்களெல்லாம் ஊளையிட்டுக்கொண்டு ஓட்டமெடுக்காதோ, என்பதை தமிழ்நாட்டு ஏழைமக்கள் நன்கு தெரிந்துகொள்ளவேண்டுமென்பதே அடியேனுடைய எண்ணம். தமிழ் மக்களே! ஏழை விவசாயிகளே!! மைபொதி விளக்கே என்ன மனத்தினிற் கறுப்புக்கொண்டுவரும் அரசியல் வாதிகளிடத்தில் சிக்காதீர்கள்! அவர்கள் சூழ்ச்சிக்கு அகப்படாதீர்கள்! காந்தி அடிகள் கூறுவதை அன்புடன் கேளுங்கள்!

பழனிக்குமாரன்,
ஆலமரத்துபட்டி

---

## கதர் போர்டுக்கு ஓர் வேண்டுகோள்.

கதர்போர்டுக்குச் சம்மந்தமான கிளை வஸ்திராலயங்களில் வியாபாரம் செய்தவற்காக ஏற்படுத்தப்பட்டிருக்கும் ஒவ்வொரு குமாஸ்தாவும் கடையில் வியாபாரமில்லாத நேரங்களில் இராட்டையை வைத்து நூல் நூற்று மாதம் ஒன்றுக்கு 1000 கெஜமாக அகில இந்திய நூற்போர் சங்கத்திற்கு நூல் சந்தா அனுப்பவேண்டும். இந்த விதமாக 22 கிளை வஸ்திராலயங்களில் உள்ளவர்களும் மாதம் 1000 கெஜம் நூல் தந்தா அனுப்புவார்களானால் மாதம் 1-க்கு 22000 கெஜம் நூல் அதிகப்படும். சந்தாதாரர்களும் அதிகப்படுகிறார்கள். ஒவ்வொரு கடையிலும் இந்த மாதிரி நூல் நூற்றுக்கொண்டிருக்கும் பக்ஷத்தில் கதர்வாங்குவதற்காக அங்கே வரும் ஒவ்வொருவரும் தங்கள் வீடுகளில் இராட்டை வைத்து நூல் நூற்க முயற்சி செய்வார்கள். கிராமஜனங்களுக்குப் பிரசாரம் செய்வதைக் காட்டிலும், அவர்கள் ஒரு தடவை நேரில் நூல் நூற்பதைப்பார்த்து விட்டால் அதிக ஊக்கத்துடன் நூல் நூற்பதற்கு வேண்டிய ஏற்பாடு செய்வார்கள். கிராம ஜனங்களும் தங்கள் வீடுகளில் இராட்டையை வைத்து நூல் நூற்று அகில இந்திய நூற்போர் சங்கத்திற்கு நூல் சந்தா அனுப்புவார்களென்று நம்புகிறேன். ஆகையால் கதர் போர்டார் அவர்கள் இதைக்கவனித்து அமுலுக்குக் கொண்டுவந்து நடத்திவைக்கவேணுமாய்க்கேட்டுக்கொள்ளுகிறேன்.

கோபி, 14-7-26.

இங்ஙனம்,
வி. ஆர். சுப்பு பண்டாரம்

கோவை ஸ்ரீமான் ஆர். கே. ஷண்முகம் செட்டியார் அவர்களுக்கு

# ஒரு பகிரங்கக்கடிதம்.

ஐயா, செட்டியார் அவர்களே!

தாங்கள் கோயமுத்தூர் ஜில்லாவில் ஒரு பிரபல மிராசுதாரராகவும் பெரிய பாங்காராகவும் தக்க வியாபாரியாகவும் முக்கிய தலைவராகவும் இருக்கிறீர்கள்.

இவ்வளவோடு மாத்திரமல்லாமல் விசேஷக் கல்வியும் ஆங்கிலேயர் விரும்பத்தக்க ஆங்கிலத்திறனும் சொல்வன்மையும் வியவகார அறிவும் அரசியல் ஞானமும் பெற்றிருக்கிறீர்கள். பார்ப்பனரல்லாதாரிடத்தில் உண்மை அபிமானங்கொண்டு பார்ப்பனரல்லாதார் முன்னேற்றமே அரசியல் முன்னேற்றத்திற்கு மிகுதியும் அடிப்படையானது என்றும எண்ணியிருக்கிறீர்கள்.

இந்து மத முன்னேற்றத்திற்கு இந்து தேவஸ்தானச் சட்டம் இன்றியமையாதது என்று எண்ணியிருக்கிறீர்கள்.

இவ்வளவு உண்மை யோக்கியதை உள்ள நீங்கள் போலிகளுடன்-சுயநலப் பார்ப்பனர்களுடன் - சேர்ந்து திரிவதன் இரகசியம் என்ன?

ஸ்ரீமான்கள் எஸ். சீனிவாசய்யங்கார், எஸ். சத்திய மூர்த்தி, ரெங்கசாமி அய்யங்கார் ஆகிய இவர்களைத்தாங்கள் உண்மையிலேயே யோக்கியர்கள் என்று நம்புகிறீர்களா?

"காரியத்திற்கு எதையும் செய்யலாம்" என்கிற நீதிபின்படி தங்களுக்கு இந்தியா சட்ட சபை ஸ்தானம் பெற பார்ப்பனர்கள் உதவி வேண்டுமே என்கிற எண்ணத்தின் பேரில் இவர்கள் பின்னால் சுற்றுகிறீர்களா?

இவர்கள் தயவில்லா விட்டால் தங்களுக்குக் கோயமுத்தூர் சேலம் வடஆற்காடு ஜில்லா குடியானவர்கள் ஓட்டுக் கொடுக்க மாட்டார்கள் என்று பயப்படுகிறீர்களா?

கோயமுத்தூர் சேலம் ஜில்லாக்களில் உள்ள குடியானவர்களுக்கு இந்த ஸ்ரீமான் அய்யர் அய்யங்கார் ஆச்சாரியார் போன்ற பார்ப்பனர்களின் தந்திரமும் சூழ்ச்சியும் இன்னமும் தெரியவில்லை என்று நினைக்கிறீர்களா?

நிகழும் புது வருஷப் பிறப்பன்று ஸ்ரீமான் எஸ். ஸ்ரீனிவாச அய்யங்காருக்கு "பு ஸ்ரீநிவாச அய்யங்கார்" என்றும், ஸ்ரீமான் சத்திய மூர்த்தி அய்யருக்கு "அசத்திய மூர்த்தி அய்யர்" என்றும் ஸ்ரீமான் ரெங்கசாமி அய்யங்காருக்கு "அரக்கசாமி அய்யங்கார்" என்றும் பாரத மக்கள் பட்ட மளித்திருப்பதை அறீயீரா? அறிந்திருந்து தாங்கள் செட்டியாரானதினால் "எரிகிற காசு வளையிடுமா" என்பது போல் அவர்களாலேயும் கிடைத்தவரையில் லாபம் வரட்டுமே என்கிற வியாபாரத்திறனோ?

பார்ப்பனர் இல்லாவிட்டால் நமது நாட்டில் மழையே பெய்யாது என்று நினைத்து பார்ப்பனர்களை 'சாமி' 'சாமி' என்று சொல்லிக் கும்பிட்டுக் கொண்டு இருந்த நம் நாட்டு வேளாள சமூகத்தார் கூட பார்ப்பன சூழ்ச்சியையும் தந்திரத்தையுமறிந்து இப்பொழுது "அய்யோ, பூநூலை உள்ளே சேர்த்தால் கெட்டுது காரியம்" என்று கிராமம் கிராமமாய், இட்டேரி இட்டேரியாய், வேலிக்கால் வேலிக்காலாய் பேசிக்கொண்டிருப்பது உங்கள் காதுக்கு எட்டவில்லையா?

ஒரு கூட்டத்தில் ஒரு அய்யங்காருக்கு ஜில்லா போர்டு பிரசிடெண்டு வேலை கொடுத்துத் தொலைத்து விடலாமா என்று ஒரு வேளாளரல்லாதார் சொன்னவுடன் 4, 5 வேளாள தாலூக்கா போர்ட் பிரசிடெண்டுகள் "அய்யங்காருக்கு ஜில்லா போர்டு பிரசிடெண்டு வேலை கொடுத்தால் நாங்கள் எல்லாரும் இந்த ஜில்லாவில் குடியிருக்கக் கூட முடியாது. எங்கள் தாலூகா போர்டு பிரசிடெண்டு வேலைகளை ராஜீனமா கொடுத்து விடுவோம்" என்று சொன்னதைத் தாங்கள் காதாரக் கேட்கவில்லையா?

கோவை ஜில்லா சட்ட சபை அபேக்ஷகர்களில் இரண்டு பார்ப்பனரல்லாதாரில் ஒருவர்,— "எனக்கு சட்ட சபை மெம்பர் வேலை கிடைக்காவிட்டாலும் சரி, எந்த ஊருக்கும் ஓட்டு கேட்பதற்கு இனி அய்யங்காருடன் மாத்திரம் போகவே மாட்டேன். கோபிசெட்டி பாளையத்திற்குப் போனதே போதும்" என்று சொன்னார்களே; அது தங்கள் காதில் விழவில்லையா?

ஒரு கனவான்,-"இக்கூட்டத்திற்கு ஸ்ரீமான் வி. வி. வெங்கட்டரமண அய்யங்காருக்கு அழைப்புக் கடிதம் அனுப்பப்படவில்லையாமே அது வாஸ்தவம்தானா?" என்று கேட்க, மற்றொரு கனவான்,-"ஆம், அவரை அழைத்தால் ஒன்றிருக்க ஒன்றைப்பேசி உளரிக்கொட்டி கூட்டத்தின் கௌரவத்தைக் கெடுத்து விடுகிறார். கடைசியாய் எல்லோர் பெயரும் கெட்டுப் போகிறது, அதனால் தான் கூப்பிட வில்லை," என்று பேசிக்கொண்டார்களே அதைத் தாங்கள் கவனிக்கவில்லையா?

ஸ்ரீமான்கள் டி. ஏ. இராமலிங்க செட்டியார் அவர்களும் வி. வி. வெள்ளியங்கிரிக் கவுண்டர் அவர்களும் தாங்கள் ஜஸ்டிஸ் கக்ஷிக்காரர் அல்ல என்று சொன்னாலும் பார்ப்பனர் கக்ஷியாகிய சுயராஜ்யக் கக்ஷிக்காரர்கள் அல்ல என்று சொல்லி விட்ட காரணத்தினால் கோவை ஜில்லா நல உரிமைச் சங்கத்தின் சார்பாய் அவர்களுக்குப் போட்டியாய் யாரையும் நிறுத்தாமல் ஸ்ரீமான் வெங்கட்டரமணய்யங்காருக்கு போட்டியாய் மாத்திரம் ஸ்ரீமான் சி. எஸ். இரத்தினசபாபதி முதலியாரை நிறுத்தியிருப்பதும், தாங்கள் இன்னமும் பார்ப்பனக் கட்சியான சுயராஜ்யக்கட்சியின் சார்பாய் நிற்பதால் தாங்களுக்குப் போட்டியாக ஸ்ரீமான் எம். சம்பந்த முதலியார் அவர்களை நிறுத்தியிருப்பதும் தங்களுக்குத் தெரியாதா?

ஸ்ரீமான் டி. ஏ. இராமலிங்கம் செட்டியார் அவர்களைவிடவா தங்களுக்கு பார்ப்பனர் தயவு அதிகமாய் வேண்டும்?

ஸ்ரீமான் இராமலிங்கம் செட்டியார் சுயராஜ்யக் கட்சியார் தயாரித்த உறுதிமொழித் திட்டத்தில் கையெழுத்துப் போட்டு 500 ரூபாயும் செலவுக்குக் கொடுத்தான பிறகு பார்ப்பனர்களின் சூழ்ச்சியும் தந்திரமும் அறிந்து பார்ப்பனர்கள் ஜஸ்டிஸ் கட்சியைக் கொல்ல தங்களை உபயோகப் படுத்திக் கொள்ளுகிறார்கள் என்கிற மர்மம் தெரிந்ததும், தான ஜஸ்டிஸ் கட்சிக்கு விரோதமாயிருந்தாலும் பார்ப்பனர்களுக்கு இடம் கொடுக்கக்கூடாது என்கிற காரணத்தால் "அய்யங்கார் கூட்டம் பொய் பேசுகிறார்கள், பேச்சுத்தவறுகிறார்கள், ஏமாற்றப்பார்க்கிறார்கள்" என்று சொல்லிக் கொண்டு ஸ்ரீமான்கள் செட்டியார் கவுண்டர், இவர்கள் கட்சித் தலைவரான சீமான் சி. வி. எஸ். நரசிம்ம ராஜு முதலிய எல்லோரும் காங்கிரஸ் கட்சி சம்பந்தத்தை விட்டு விட்டார்களே இது கூட தங்களுக்குத் தெரியவில்லையா?

தமிழ்நாடு சார்பாய் இந்தியா சட்டசபைக்குள்ள 6-ஸ்தானங்களில் 5-க்கு அதாவது, ஸ்ரீமான் ஏ. ரெங்கசாமி அய்யங்கார் எம். கே. ஆச்சாரியார் துரைசாமி அய்யங்கார் சீனிவாசய்யங்கார் சேஷய்யங்கார் ஆகிய பார்ப்பன அய்யங்கார்கள் நிற்கிறார்கள் தாங்கள் ஒருவர் மாத்திரம் பார்ப்பனரல்லாதாராய் நின்றால் தமிழ் நாட்டிற்கு தனியாய் ஒன்றும் செய்ய முடியாது என்று பயப்படுகிறீர்களா?

"இந்தியா சட்டசபைக்குப் பார்ப்பனரல்லாதார் கட்சியால் தெரிந்தெடுத்தனுப்பப்பட்டவன்; நான்ஒருவனே தமிழ்நாடு பார்ப்பனரல்லாதாருக்கு பிரதிநிதி" என்று சொல்ல தங்களுக்கு திடமும் தைரியமும் இல்லை என்று பயப்படுகிறீர்களா?

எப்படி இருந்தாலும் ஸ்ரீமான் சீனிவாசய்யங்காரும் அவர் சகாக்களும் அரசியல் உலகில் பொய்யர் என்றும் புளுகர் என்றும் பேச்சுத் தவறியவரென்றும் பதவிக்கு ஆசைப்படுகிறவர் என்றும் பார்ப்பனரல்லாதார் ஆதிக்கத்தை அழித்துப் பார்ப்பனராஜ்யத்தை நிலை நிறுத்தப் பாடு படுகிறவரென்றும் கொஞ்சமும் அபிப்பிராய பேதமில்லாமல் ஏகமனதாய்ச் சொல்ல பெற்றிருப்பதை தாங்கள் உள்ளுற அறிந்தும் தாங்களும் சில சமயங்களில் சொல்லியும் இருக்க, இன்னமும் அவர் தலைவராய் இருக்கும் ஒரு ஸ்தாபனத்தில் தாங்கள் அவருக்கு காரியதரிசியாயிருப்பதென்பது தகுதியானதா? இது தங்கள் நாணயத்தைப் பாதிக்காதா?

அல்லாமலும், தங்களை இந்த ஸ்தானத்திற்கு அமர்த்திய ஸ்ரீமான்கள் வரதராஜுலு நாயுடுகாரு, கலியாண சுந்தர முதலியார், இராமசாமி நாயக்கர் ஆகிய மூவரும் விலகிய பின் தாங்கள் அங்கு அரை நிமிஷமிருக்கலாமா? இவைகளைத் தாங்களே தனித்திருந்து சாவதானமாய்க் கண்ணியமான குலமத தேசாபிமானத்துடன் சிந்தித்துப் பாருங்கள்! சிந்தித்துப்பாருங்கள்!! தயவு செய்து சிந்தித்துப் பாருங்கள்!!!

"கருவாட்டுக்கடைக்காரனை கட்டி அணைவதை விட, கந்தப்பொடிக்காரன் கைகுட்டு மேலானதல்லவா?"

இது தங்களுக்குத் தெரியாததா?

உண்மையில் பெரும்பான்மையான மக்களும் பட்டகாரர் போல் பொறுப்புள்ள தலைவர்களும் இந்த ஜில்லா பார்ப்பனரல்லாதார் சார்பாய் இந்தியா சட்ட சபைக்குத் தாங்களே போக வேண்டுமென்றுதான் விரும்புகிறார்கள், தங்களுக்கே ஜெயம் கிடைக்க வேண்டுமென்றும் பிரார்த்திக்கிறார்கள். இதன் பலனய்த்தாங்களேதான் ஜெயிக்கவும்போகிறீர்கள். ஆனால் அந்த ஜெயம் கண்ணியமான தாய், பரிசுத்தத் தன்மையுடையதாய் இருக்கட்டும்.

தங்கள் நன்மையை நாடும்,

ஒரு ஓட்டர்.

## எவரை பாதிக்கும்?

### சென்னையில்

### போலீஸ் கமிஷனரின் தடை உத்திரவு.

ஜஸ்டிஸ் கட்சியின் சார்பாகவும் சுயராஜ்யக்கட்சியின் சார்பாகவும், சென்னையிலே தினமுங்களாக தேர்தல் பிரசாரக்கூட்டங்கள் வெகு மும்முரமாக நடை பெறுகின்றன. அவற்றுள் சுயராஜ்யக்கட்சியின் சார்பாக நடப்பவற்றிற்குப் பொது ஜனங்கள் கூட்டம் அருகி, ஜஸ்டிஸ் கட்சியின் சார்பாக நடப்பவற்றிற்குப் பெருகி வருகின்றன.

எனவே இப்பொழுது நடக்கும் தேர்தல் பிரசாரக்கூட்டங்களுள் தலை சிறந்து மிளிர்வது ஜஸ்டிஸ் கட்சியினருடையதே. ஆதலால் கூட்டங்கூடக் கூடாதென்ற உத்திரவு ஏதேனும் பிறக்குமேல் அது ஜஸ்டிஸ் கட்சியின் கூட்டத்தை பாதிப்பதாகவே யிருக்கும். ஏனெனில் முற்கூறியது போன்று சுயராஜ்யக் கட்சியின் கூட்டத்தைக்கண்டு மதிப்பாருமில்லை, மகிழ்வாருமில்லை. இவ்வாறிருக்க, சென்னை நகர போலீஸ் கமிஷனர்,

"சென்னை நகர எல்லைக்குட்பட்ட எந்தத் தெருவிலும் வீதியிலும், தெரு மூலையிலும் ரஸ்தா மூலையிலும் பொது மக்கள் நடமாடும் எந்த ராஜபாட்டையிலும் பொது ஜன நடமாட்டத்திற்குத் தடையாயிருக்கக்கூடிய வேறெந்த பொது இடத்திலும் தேர்தல் கூட்டங்களோ ஊர்வலங்களோ நடத்த இனி அனுமதிக்க முடியாது".

என்ற தொருதடை உத்திரவை பிறப்பித்திருக்கின்றார். ஆனால் இத்தடை உத்திரவுக்கு "ஜஸ்டிஸ்", "திராவிடன்" ஆகிய இருபத்திரிகைகளும் ஆதரவு கூறுகின்றன. இவைகள் ஆதரவு கூறுவது, எக்காரணம் பற்றியே யாயினும் யானை தன் தலையிலேயே மண்ணைவாரிப் போட்டுக்கொள்வது போன்றிருக்கிற தென்பதே நமது கருத்து. ஏனெனில் நாம் முன்பே கூறியிருப்பது போல் சுயராஜ்யக் கட்சிக்கு சார்பாகக் கூட்டம் சேருவதுமில்லை, கூடும் சிறு கூட்டமும் அமைதியோடு கலைவதுமில்லை. ஆனால் ஜஸ்டிஸ் கட்சியின் பிரசங்கங்களிலோ ஆயிரக்கணக்கான ஜனங்கள் வந்து கூடுவதும் பொறுப்பு வாய்ந்த பிரமுகர்களும் பெரிய மனிதர்களும் பேசிவருவதுமாக யிருக்கின்றனர். இம்மட்டோ! காங்கிரஸிலிருந்து தேசத்திற்காக எவ்வளவோ அருந்தியாகமும் பெருந்தொண்டும் ஆற்றிவந்த திருவாளர்கள் ஆரியா, சக்கரைச் செட்டியார், இராமசாமி நாயக்கர், கலியாணசுந்திர முதலியார், டாக்டர் வரதராஜுலு நாயுடுகாரு தண்டபாணிப் பிள்ளை, இராமநாதன், சின்னையா பிள்ளை, மௌலானா சாகிப் போன்ற நவமணிகளும் ஜஸ்டிஸ் கட்சியின் சார்பாக பேசப்போகுங்காலம் சமீபித்து விடவே - போலீஸ் இலாகா நிர்வாகம் மைலாப்பூர் கோஷ்டியாரின் இனத்தவர் கையிலிருப்பதால் - 'இவர்களெல்லாம் ஐயங்கார் கட்சிக்கு ஆதரவு கூறவேண்டும், அப்படி யல்லாமல் ஜஸ்டிஸ் கட்சியின் சார்பாகப் பேசினால் 144-வது பிரிவுப்படி. தடை உத்திரவு போடுவேன்' என்று சொல்லுவதற்குப் பதிலாக இருப்பதுபோன்ற இத்தடை உத்திரவை போலீஸ் கமிஷனர் பிறப்பித்து விட்டார். இச்சட்டம் பார்ப்பனர்களுக்கு உதவி செய்வதாயிருந்தாலும் 'கோழி திருடியும் கூடக் குலாவுவது போல்' "சுதேசமித்திரன்" இவ்வுத்திரவைக் கண்டிக்கிறான். இத்தடை உத்திரவைக்கொண்டு "மித்திரன்" அடங்கா மகிழ்வு கொள்ளவேண்டியதிருக்க மாயக் கண்ணீர் விடுவது பொது மக்களை ஏமாற்றுதற்கேயன்றி வேறல்ல.

இனி ஜஸ்டிஸ் கட்சியார் வாளாகிடத்தலாகாது? கட்டிடங்களுக்குள்ளும் சுற்றுலைச் சுவர்களுக்குள்ளும் கூட்டம் நிகழ்த்துவதோடுமட்டுமல்லாது ஜஸ்டிஸ் கட்சியார் செய்தநன்மைகளையும் சுயராஜ்யக்கட்சியின் பொய்மைகளையும் எழுதி பதினாயிரக்கணக்கான துண்டுப் பிரதிகளும் துண்டுப் புத்தகங்களும் அச்சிறுத்தி ஒவ்வொரு வீடுதோறும் வழங்கவேண்டு மென்பதாக ஜஸ்டிஸ் கட்சியாருக்கு நினைவூட்டுகிறோம்"

## "போலிக் கட்சி"

"மஹாத்மா காந்தி, மௌலானாக்கள் அலி சகோதரர்கள் முதலிய உத்தம தேசாபிமானிகள் செல்வாக்குப் பெற்று விளங்கிய உண்மைக் காங்கிரஸை பல் வேறு சூழ்ச்சிகளால் ஒழித்து சுய நலங் கருதி சுயராஜ்ஜியப்போர் செய்துவரும் சுயராஜ்யக் கட்சியென்னும் போலிக் கட்சியினது தலைவர்களென்பதாகச் சாற்றித்திரியும் நயவஞ்சகர்களின் அயோக்கியத்தனத்தை முஸ்லிம் சமூகம் .............. நன்கு தெரிந்துகொண்டதாகையால் அக்கட்சித் தலைவர்களின் பாசாங்கு வார்த்தைகளையும் பகல் வேஷ நடிப்பையும் முஸ்லிம் சமூகம் இனி நம்ப முடியாது. உண்மை இவ்வாறு இருப்பதால் சட்டசபை மோகத்தைக் கொண்டு அக்கட்சியில்(சுயராஜயக் கட்சியில்)சேரும் முஸ்லிம்களும் அவர்களை ஆதரிப்பவர்களும் முஸ்லிம் சமூகத்திற்கும் மார்க்கத்திற்கும் துரோகிகளாவார்களென்பதே நமது திடமான அபிப்பிராயம். அக் கட்சியார் ஹிந்து முஸ்லிம் ஒற்றுமையை விரும்புவதாகக் கூறும் வார்த்தைகள் போலி வார்த்தைகளென்றே முஸ்லிம் சமூகம் கருதவேண்டும்.

"உத்தம தேசத் தலைவர்களாகிய மகாத்மா காந்தி, அலி சகோதரர்கள் முதலிய மாறுதல் வேண்டாதார் முன் வந்தால் உண்மை காங்கிரஸை உயிர்ப்பித்து இப்போலி சுயராஜ்யக் கட்சியை ஒழித்து விட இப்பொழுதும் முடியும். ஆகையால், உடனே நமது உத்தம தேசாபிமானிகள் முன் வந்து உண்மைக் காங்கிரஸை உயிர்ப்பித்து இப்போலிக் கட்சியை ஒழித்து பெருமை வாய்ந்த தேசீய ஸ்தாபனமாகிய காங்கிரஸ் ஸ்தாபனத்தின் கண்ணியத்தைக் காப்பாற்றுவார்களென்று நம்புகிறோம். இன்றேல் சுயராஜ்யக் கட்சி என்ற போலிக் கட்சியார் காங்கிரசின் மதிப்பையும் நம்பிக்கையையும் போக்கடித்து விடுவார்களென்றே கூறலாம்.

"முஸ்லிம் சகோதரர்கள் அக்கட்சியினர்களின் விஷயத்தில் ஜாக்கிரதையாக நடந்து கொள்ளவேண்டுமென்று நாம் மீண்டும் எச்சரிக்கை செய்கிறோம்."

"தாருல் இஸ்லாம்".

---

## ஒரு பகிரங்கப் பாராட்டுக் கடிதம்.

"குடி அரசு" பத்திராதிபர் அவர்களுக்கு, தயவுசெய்து இதனைப் பிரசுரிக்கக் கோருகிறேன். இதன் பிரதி ஒன்று ஸ்ரீமான் சி. எஸ். ஆர். அவர்களுக்கும் அனுப்பியிருக்கிறேன்.

கோயமுத்தூர் 11—7—26. D. S. Panday, ரங்கே கவுண்டர் வீதி.

எனதன்பார்ந்த நண்பர், ஸ்ரீமான் இரத்ன சபாபதி முதலியார் அவர்களுக்கு.

தாங்கள் நமது ஜில்லாவிலும் நகரிலும் சர்வ ஜனங்களுக்குமாக செய்து வந்த உண்மை ஊழியத்தை மதித்துக் கொடுத்த ராவ்பஹதூர் பட்டம் தங்கள் நண்பர்கள் அனைவருக்கும் பெரும் சந்தோஷத்தையும் உத்ஸாகத்தையும் உண்டாக்கியிருக்கிறது. ஆயினும் ஒற்றுமையாதாரில், கடையனுகி விளங்கிய என் மகிழ்வு தங்களுக்குச் சிறிது விபரீதமாகவும் ஆச்சரியமாகவும் தோன்றலாம். உலகம் தங்கள் ஊழியத்தை மதித்ததற்காக அதை நான் இயற்கை உணர்வால் தூண்டப்பெற்று அனுபவித்து ஆனந்தப்படும் இச்சந்தர்ப்பத்தில் "என்னுடைய இயக்கமும் கொள்கையும் என்ன" என்பதைப்பற்றிச் சிந்திக்கவே கூடாது. கொள்கையைவிட, அன்பும், தன்னையறியாதுள்ளத் துண்டாகும் பற்றும் பாசமும் பெரிதல்லவா? நிற்க,

தாங்கள் ஜனசமூகத்தில் உயர்வு தாழ்வென்பது சிறிதுமின்றி எல்லோரிடத்தும் சமத்வமும் உண்மையன்பும், பிரிதியும் வகித்து முக்கியமாக ஏழைகளிடத்தும் தாழ்ந்த வகுப்பினர் என்று அழைக்கப்படுவோரிடத்தும் ஜீவ இரக்கம் தயவு பக்ஷாதாபம் பாராட்டி வருகிறீர்கள். இவ்வருமைக்குணங்கள் தங்களின் அருமைப் பிதாவிடமிருந்தவைகள். இச்சமயம் நான் அப்பெரியோரை நினையாமலிருக்க முடியவில்லை. பரம்பரையாகத்தங்களுக்கிறங்கிய இக்குணங்கள் தங்கள் பிறப்பிலிருந்தே தங்களோடு வளர்ந்து வருகின்றன என்பது எனக்குத் தெரியுமாதலால், தங்களைத் தேடிவந்த இப்பட்டம் தன்னையழகு படுத்திக் கொண்டதேயல்லாது அது தங்களைச்சிறிதும் அலங்கரித்து விட்டதாக நான் நினைக்க முடியவில்லை. இதனிலும் மேலானதென, பெரிதென, சர்க்காரும் சாதாரண ஜனங்களும் மதித்திருக்கும் பெரிய பட்டங்களுக்குத் தங்கள் போன்றோரின் உயர்வான நற்குணங்களே நல்லிருப்பிடமென்பதை உலகம் இன்னும் நன்கு அறியவேண்டுமென விரும்புகிறேன். தங்களுடைய தேசத்தார் எக்காலத்தில் இவ்வுண்மையை அறிவார்களோ அப்பொழுது தான் அவர்கள் ஜாக்கிரதையுள்ள மனிதர்களென சர்க்காரால் பயபக்தியுடன் பெரிதும் மதிக்கப்படுவார்கள். ஜனங்களிடத்து தங்களுக்குள்ள அன்பையும் தியாகத்தையும் அறிந்த சர்க்கார் தங்களை இவ்வித பட்டத்தால் ஏமாற்றி விடலாமென ஒருக்காலும் நினைத்திருக்கமுடியாது. தியாகத்தையே பூஜிக்கும் தங்கள் வாழ்வால் இன்னும் மேலான பதவிகளும பட்டங்களும் அலங்கரிக்கப்படவேண்டுமெனபதை நமது ஜில்லா வாசிகள் நன்குணர வேண்டுமென விரும்பி என் சந்தோஷத்தின் அறிகுறியாக இதை எழுதிக்கொண்டேன்.

உண்மை அன்பன்.

D. சுப்பிரமணிய பாண்டே.

## ஸ்ரீமான் வெங்கிட்டரமணய்யங்காருக்கு ஒரு புது யோகம்.

(சித்திர புத்திரன் எழுதுவது.)

கோயமுத்தூர் ஜில்லா தலைவர்கள் மகாநாடு ஒன்று கோயமுத்தூரில் கூட்டப்பட்டது வாசகர்களுக்குத் தெரியும். அக்கூட்டத்திற்கு ஸ்ரீமான் ஸி. வி. வெங்கிட்டரமணய்யங்காருக்கு அழைப்புக் கடிதம் அனுப்பப்படவில்லை. அழைப்புக் கடிதம் அனுப்பப்படாததற்கு ஸ்ரீமான் அய்யங்கார் பொறுப்பாளியா, அல்லது அய்யங்காரின் கூட்டு அபேக்ஷகர்களில் எவராவது பொறுப்பாளியா, அல்லது கூட்டப்பட்டவர்கள் பொறுப்பாளியா என்பது அவ்வளவு சுலபமாய் வெளியில் சொல்லக் கூடிய விஷயமல்ல.

இதனால் நமது அய்யங்காருக்கு ஒரு புது யோகம் பிறந்து விட்டது. அதாவது தன்னை அக் கூட்டத்திற்கு அழைக்காத காரணத்தைக்கொண்டு ஒவ்வொரு பார்ப்பனர்கள் வீட்டுக்கும் போய், பார்ப்பனரல்லாதார் எல்லாம் தன்னைத் தள்ளிவிட்டதாகவும், இந்தக் காரணத்திற்காகவே பார்ப்பனர்கள் எல்லாம் கட்டுப்பாடாக பார்ப்பனர்களுக்கே தனி ஓட்டு (ஸிங்கிள் ஓட்டு) போடவேண்டுமென்றும் ஒரு பார்ப்பனனாவது பார்ப்பனரல்லாதாருக்கு ஓட்டு செய்யக் கூடாதென்றும் சொல்லி ஒவ்வொரு பார்ப்பன ஓட்டரிடத்திலும் பிரமாணமும் வாக்குத்தத்தமும் வாங்கி கட்டுப்பாடு செய்து வருகிறாரென்றும், பார்ப்பனர்களும் கூட்டம் கூட்டமாகப்போய் அய்யங்காருக்குப் பிரமாணம் செய்து கொடுத்து விட்டு வருகிறார்களென்றும், இதன் காரணத்தாலேயேதான் கூட்டத்திற்கு அழைக்கப் பட்ட சில பார்ப்பனர்களும் அக்கூட்டத்திற்கு வரவில்லை என்றும் சொல்லப்படுகிறது. அவ்வாறு அழைப்புக் கடிதம் அனுப்பப்பட்டும் கூட்டத்திற்கு வராது நின்றவர்கள் ஸ்ரீமான்கள் ஸி. எஸ். சாம்பமூர்த்தி அய்யர், கே. இராகவேந்திர ராவ், இராமசாமி அய்யங்கார் ஆகிய மூவருமே யாவார்கள். இவர்கள் வக்கீல் உலகத்தில் செல்வாக்குள்ளவர்கள். பொது ஜனங்களாலும் மதிக்கப்பட்டவர்கள். பொது ஜனங்களில் பலரும் இவர்கள் செல்வாக்குக்குக் கட்டுப்பட்டவர்கள். இப்பேர்ப்பட்டவர்களே கட்டுபாடாயிருந்து அய்யங்கார் யோகத்திற்குக் காரணமானவர்களாயிருப்பார்களானால், மற்றப் பார்ப்பனர்களின் கட்டுப்பாடும் நமது அய்யங்காரின் யோகத்திற்கு எவ்வளவு காரணமாயிருக்காது?

ஆனால் நமது அய்யங்காரின் இவ்வித கட்டுப்பாட்டையும் யோகத்தையும் நாம் மனமார உள்ளன்பு வரவேற்கிறோம். ஏனெனில் இவர்களைப் பார்த்தாவது மற்ற வகுப்பாருக்குப் புத்தி வராதா, அல்லது மற்ற வகுப்பாருக்கு புத்தி கற்பிக்கவாவது இந்த பார்ப்பனக் கட்டுப்பாடு ஒரு துணைக் கருவியாயிருக்காதா என்கிற ஆசையினால்தான். ஆதலால் இப்போது நமது ஜில்லாவுக்கு நிற்கும் அபேக்ஷகர்களில் நமது அய்யங்கார் பார்ப்பனரொழிந்த மீதி அபேக்ஷகர்கள் மூவரும் பார்ப்பனரல்லாதாராயிருப்பதுடன் மூவரும் வேளாளர்களாகவே இருக்கிறார்கள். அதாவது ஸ்ரீமான் வி. ஸி. வெள்ளியங்கிரிக் கவுண்டர் கொங்கு வேளாளர், ஸ்ரீமான் இரத்தின சபாபதி முதலியார் தொழுவ வேளாளர், ஸ்ரீமான் டி. எ இராமலிங்க செட்டியாரும் சோழ தேசத்து வேளாளர். அதுபோலவே நமது ஜில்லா ஓட்டர்களில் 100-க்கு 75 பேருக்கு மேலாகவே வேளாளர்களாவார்கள் மீதி 25 பேரிலும் 20 பேர் பார்ப்பனரல்லாதார் ஆவார்கள். ஆதலால் நமது பார்ப்பனரல்லாதாரில் வேளாளர்களும் மற்றவர்களும் நமது பார்ப்பனர்களைப் போலவே பார்ப்பனரல்லாதாரான வேளாளர்களுக்குத்தான் ஓட்டு செய்வதே அல்லாமல் பார்ப்பனர்களுக்கு ஓட்டு செய்வதில்லை என்று கட்டுப்பாடுடன் உறுதி செய்து தீர்மானித்துக் கொண்டால் பார்ப்பனரல்லாத சமூகங்கள் தானாகவே முற்போக்கடையும்.

பார்ப்பனரல்லாத குடியானவர்கள் நெற்றி வியர்வை நிலத்தில் சொட்டும்படியாக இரவு பகலாய்ப்பாடுபட்டு சம்பாதிக்கும் பணத்தை பார்ப்பனர்களிடம் கொட்டிக் கொடுத்து விட்டு "சாமி" "சாமி" என்று அவர்கள் வீட்டு பந்தக்காலைக் கட்டிக் கொண்டு திரிய வேண்டிய அவசியமில்லை.

நமது நாட்டில் வேளாளர்கள் பஞ்சம், பஞ்சம் என்று அடித்துக் கொள்ளுவதெல்லாம் முழுதும் மழை பெய்யாததாலோ வெள்ளாமை விளையாததாலோ என்று சொல்லமுடியாது. வேளாள சமூகத்திற்கு ஏற்பட்ட பஞ்சமெல்லாம் வக்கீல்கள் அடிக்கும் கொள்ளையினால் ஏற்பட்டதே அல்லாமல் வேறல்ல. இப்பேர்ப்பட்ட வக்கீல்கள் ஏற்படுத்தவும் வழக்குகளை உற்பத்தி செய்யவும் நமது பார்ப்பனருக்கு அனுகூலமாயிருப்பது இந்த சட்ட சபைகளே யாகும்.

ஆகையால் இவற்றை ஒழித்து வேளாள சமூகம் முன்னுக்கு வரவேண்டுமானால், கூடுமானவரை பார்ப்பனர்களை சட்டசபைக்கு அனுப்பாமல், உண்மையாய் வேளாளர் நன்மைக்கு உழைக்கும் வேளாளரே போகும்படி பார்த்துக்கொண்டால் போதுமானது. சட்ட சபை மூலம் சுயராஜ்யம் வரும் என்று எண்ணுவதெல்லாம் "கேள்வாகில் (ராகியில்) நெய் ஒழுகுகிறது" என்று சொல்லுவது போன்றேயாகும். ஆதலால் பார்ப்பன சமூகத்தார் எப்படி தங்களுடைய ஓட்டுகளை ஒரு பார்ப்பனருக்குக் கொடுப்பதேயல்லாமல் பார்ப்பனரல்லாதாருக்குக் கொடுப்பதில்லை என்று ஸ்ரீ ஸி. வி. வெங்கிட்டரமணய்யங்காருக்குக் கட்டுப்பாடாக பிரமாணம் செய்து கொடுக்கிறார்களோ, அதுபோலவே நமது ஜில்லா பார்ப்பனரல்லாதாரும், முக்கியமாய் வேளாள சமூகத்தாரும் கண்டிப்பாய் தங்கள் சமூகத்தாராகிய பார்ப்பனரல்லாத அபேக்ஷகர்களுக்கே ஓட்டுப் போடுவது என்று உறுதி செய்து கொள்ளுவார்களானால் அதுவே தேசத்திற்கும் தங்கள் சமூகத்திற்கும் உழைத்ததாகும். அப்படிக்கில்லாமல் தங்கள் சமூகத்தாரை அலக்ஷியம் செய்து விட்டு பார்ப்பனர் தயவுக்கும் அவர்கள் பசப்பு வார்த்தைக்கும் தந்திரத்துக்கும் ஏமாற்றுக்கும் கட்டுப்பட்டும், பார்ப்பனர்களிடம் பணம் வாங்கிக் கொண்டோ அவர்கள் தயவுக்கு கட்டுப்பட்டோ ஓட்டு சம்பாதிக்கும் தரகர்களுக்குக் கட்டுப்பட்டும் ஏமாந்து பார்ப்பனர்களுக்கு ஓட்டுச்செய்வார்களேயானால் அதைப் போல தேசத் துரோகமும் சமூகத் துரோகமும் வேறில்லை என்றே சொல்லுவோம்.

## "தொட்டது துலங்காது"

### கிருஷ்ணனுக்கும் அர்ஜுனனுக்கும் சம்பாஷணை.

அர்ஜுனன்:— ஏ, கிருஷ்ணா! சுயராஜ்யக் கக்ஷி காங்கிரசில் சேராமல் தனித்திருந்த போது அதற்குக் கொஞ்சம் மரியாதை இருந்தாப் போல் தெரிந்ததே, இப்பொழுது காங்கிரசில் சேர்ந்து சுயராஜ்யக் கக்ஷியே காங்கிரசாக மாறி மகாத்மா காந்தியும் ஆசீர்வாதம் பண்ணியும் அவர் சிஷ்யர்களும் எவ்வளவோ அதற்கு வெளிப்படையாயும் இரகசியமாயும் உதவி செய்தும் இப்படி துள்ளத் துள்ள செத்துப் போய் விட்டதே அதன் காரணம் என்ன?

கிருஷ்ணன்:—ஓ, அர்ஜுனா! இது உனக்கு தெரியவில்லையா? கலியுக பத்மா சூரன் கை வைத்தால் எது தான் வாழும்?

அ:—அது யார்? எனக்கு தெரியவில்லையே.

கி:—உண்மையாய்த் தெரியாதா?

அ:— ஆம், தெரியாது.

கி:—அதுதான் நமது ஸ்ரீமான் எஸ். சீனிவாசய்யங்கார்.

அ:—ஓ, ஹோ! அவர் தலைவரானதினால் தான் போய் விட்டதோ! சரி, சரி, அதனால்தான் நமது தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி கூட செத்துப்போய் விட்டது. இப்பொழுது எனக்கு புரிந்தது. கொஞ்சகாலத்திற்குமுன் கூட ஒரு நண்பர் எனக்குச் சொல்லியிருக்கிறார். அதாவது "நம் தலைவர் (?) ஸ்ரீமான் சீனிவாசய்யங்கார் தொட்டது துலங்காது, எதில் போய் அவர் கையை வைத்தாலும் பத்மா சூரன் கை வைத்தது போலவேதான் முடியும்; கடைசி காலத்திற்குத்தான் எந்த இயக்கமும் அவரிடம் போய்ச் சேரும்" என்று சொன்னார். அது சரியாய்ப் போய் விட்டது.

கி:—இப்போது உனக்கு புரிந்ததா.

அ:—புரிந்தது. ஆனால் இன்னும் ஒரு சந்தேகம்.

கி:—என்ன சொல்லு?


அ:—இது இரண்டும் ஒழிந்துபோனது நல்ல காரியந் தான், சிலர் காங்கிரஸ் காங்கிரஸ் என்று இன்னமும் சொல்லிக்கொண்டிருக்கிறார்களே, அதென்ன?

கி:— காங்கிரசுக்கு காலம் கிட்டிக்கொண்டது. இப்பொழுது தொண்டையில் உயிர் இருக்கிறது. இந்த வருஷம் நமது அய்யங்கார் அதற்கும் தலைவராகவரப் பாடுபட்டுக் கொண்டிருக்கிறார். நம்மைபிடித்த நல்லவேளையாய் அதிலும் அவர் கை வைக்கும்படி ஏற்பட்டு விட்டால் அதுவும் தீர்ந்து போகும்.

அ:—இம்மூன்றும் ஒழிந்தால் நமது நாட்டைப்பிடித்த சனியன் ஒழிந்து போகுமல்லவா!

கி:— இம்மூன்றும் ஒழிந்தால் போதாது, மயில்ராவணன் தலைமாதிரி வெட்ட வெட்ட முளைத்துக் கொண்டுதான் வரும்.

(இதன் தொடர்ச்சியை 10-ம் பக்கம் பார்க்க.)



அனைத்துயிர் ஒன்றென் றெண்ணி
அரும்பசி யெவற்கும் ஆற்றி
மனத்துளே பேதாபேதம்
வஞ்சகம் பொய் களவு சூது
சினத்தையும் தவிர்ப்பாயாகில்
செய்தவம் வேறொன் றுண்டோ
உனக்கிது உறுதியான
உபதேசம் ஆகும்தானே


# குடி அரசு.

அக்ஷய-ஸு ஆடி-மீ 3-உ


## மலையாளக் குடிவார மசோதா.

—:o:—

**ம**லையாளக் குடிவார மசோதா என்கிற ஒரு மசோதாவின் பேரில் சென்னை சட்டசபையில் இவ்வாரம் வாதம் நிகழ்ந்து வருகிறது. இம்மசோதாவின் தத்துவம் பிராமணர் பிராமணரல்லாதார் என்கிற வகுப்பின் நன்மை தீமைகளை அஸ்திவாரமாகக் கொண்டது. எப்படியெனில் மலையாள தேசத்தில் உள்ள பூமிகள் பெரும்பாலும் அத்தேசத்திய பிராமணர்களுக்குச் சொந்தமானது. அத்தேசத்துப் பிராமணர்களில் பெரும்பாலோர் நம்பூதிரிகள் என்னும் மலையாளப் பிராமணர்கள். இவர்களுடைய சொத்துக்கள் பாகிக்கப்படுவதே யில்லை. இந்தப் பிராமணர் தங்களுக்கு அதிகக் குழந்தைகள் பிறந்து விட்டால் குடும்பத்திற்கு அதிகச் செலவாகி விடுமென்றும், பங்கு போட்டுக் கொண்டே போனால் சொத்துக்களின் அளவு குறைந்துபோகுமென்றும் எண்ணியே, தங்கள் குடும்பங்களில் தலைவனாக உள்ளவன் (மூத்தவன்) மாத்திரந்தான் கலியாணம் செய்து கொள்வது என்றும் மற்றவர்களெல்லாம் "சூத்திர ஸ்திரீ"களை அதாவது நாயர் ஸ்திரீகளை சம்பந்தம் செய்து (தமிழ் நாட்டு தாசி வேசிகளைப் போல்) ஒவ்வொரு பிராமணரல்லாத ஸ்திரீயை வைப்பாட்டியாக வைத்துக் கொள்வதென்றும், அவர்களுக்குத் தாங்கள் வருஷம் ஒன்றுக்கு நாலுமுழத் துண்டுகள் இரண்டு ஜோடியும் தலைமுழுக எண்ணையும் கொடுத்து விடுவதென்றும், இதன் மூலமாய்ப் பெறும் குழந்தைகளைக் காப்பாற்ற வேண்டிய பொறுப்பு தங்களுக்குக் கொஞ்சமும் இல்லாமல் ஏற்பாடு செய்து அதை வெகு நாளாகப் பழக்கத்தில் வைத்திருக்கிறார்கள்.

இப்பழக்கங்கள் யாதொரு விதமான தங்கு தடையில்லாமல் நடை பெறவே, மலையாள தேசத்துப் பிராமணரல்லாத ஸ்திரீகளுக்கும் பிராமண சம்பந்தமே புண்ணியமானதென்றும் மோட்சத்திற்கு ஏதுவானதென்றும் சாஸ்திர ஆதாரங்களையும் ஏற்படுத்தி அவர்களை நம்பச் செய்திருக்கிறார்கள். இவ்வித சாஸ்திரங்களில் நம்பிக்கையில்லாமல் யாராவது தகராறுக்கு வந்து விட்டால் என்ன செய்கிறதென்று நினைத்து, சாஸ்திர ஆதாரத்திற்கு மேல் பொருளாதாரத்திலும் ஜாக்கிரதையாயிருந்து, அந்த நாட்டிலுள்ள பூமிகள் பூராவும் தங்களுடைய தாக்கிக் கொண்டு, எந்த பிராமணரல்லாதாரும் குடி இருப்பதற்குக்கூட இந்த பிராமணர்களின் தயவில்-பிராமணர்களின் பூமியில்-இருக்கும் படியாயும், இந்த பிராமணர்களின் அதிருப்திக்கு ஆளானால் மோட்ச வீடு இல்லாமல் போவதோடு, குடி இருக்க வீடும் இல்லாமல் போகும்படி ஏற்பாடு செய்து வைத்திருக்கிறார்கள்.

இது எப்படி இவர்களுக்கு சாத்தியமாகிறது என்று பார்த்தால், நமது நாட்டு பிராமணர்களுக்கு எப்படித் தாங்கள் உயர்ந்த ஜாதியார் என்பதற்கும், தங்களை "சுவாமி" என்று மற்றவர்கள் கூப்பிட்டுக் கும்பிடுவதற்கும் வேதசாஸ்திர ஆதாரத்தோடு உத்தியோக அதிகார ஆதாரமும் தேடிவைத்திருக்கிறார்களோ, அது போலவே இவர்களுக்குப் பூஸ்திதி அதிகம்; செலவு குறைவு; இவர்களைத் தவிர மற்றவர்கள் "கூலி ஆட்கள்", "வைப்பாட்டி மக்கள்". இந்த நிலைமையில் ஒவ்வொரு பிராமணக் குடும்பத்திற்குப் பணம் வருஷத்திற்கு ஆயிரக்கணக்காய் மீதப்படுவதால், அக்கம் பக்கம் உள்ள அன்னியன் பூமிகளை எல்லாம் இவர்களே வாங்கிக் கொள்ள சௌகரியப்படுகிறதும், மற்றவர்களுக்கு அதிகச் செலவும் வரும்படிக்குறைவும் ஏற்படுவதால் எப்படி யாவது இவர்களுக்கே தங்கள் பூமியை விற்றுவிட்டுப் போகவேண்டியதுமான நிலைமை ஏற்பட்டு விடுகிறது.

சாதாரணமாக, ஒரு பிராமணன் ஏறக்குறைய 40,-50 பெண்களுக்குக்கூட சம்பந்தம் வைத்துள்ள புருஷனாக ஏற்படுகிறதும் உண்டு. ஏனெனில் மலையாள தேசப் பெண்கள் தங்களை வைப்பாட்டியாக வைத்திருப்பவன் பிராமணன் என்று சொல்லிக்கொண்டால்தான் அவர்களுக்குப் பெருமை. அதிலும் கொஞ்சம் பெருமையுள்ள குடும்பஸ்தார்களாயிருந்து விட்டால் கட்டாயம் பிராமணன் பெயரைத்தான் சொல்லிக்கொள்ள வேண்டும். இல்லாவிட்டால் அந்தக் குடும்பத்திற்கு கௌரவக் குறைவு என்று எண்ணுவார்கள். சிற் சில கௌரவம் பொருந்திய நாயர் குடும்பங்களில் உள்ள பெண்களுக்குப் பிராமணர்கள் பெயரைத் தங்கள் புருஷனாகச் சொல்லிக் கொள்ளுவதற்கு கூட சாத்தியில்லாமல் 5-வருஷம் 10-வருஷம் காத்திருப்பதும், கடைசியாய் சில சமயங்களில் அந்தப் பிராமணர்களில் யாராவது ஒருவனுக்குப் பணம் கொடுத்துத் தன் சம்பந்தக்காரன் என்று சொல்லிக்கொள்ளுவதற்கு உரிமை கேட்பதும் சாதாரணமாய் நடப்பதுண்டு. பெரிய நாயர் குடும்பங்களில் வீடு கட்டுவதானால் தங்கள் வீட்டைச் சேர்ந்தாப்போல் இந்தப் பிராமணர்களுக் கென்று அவர்கள் வரப்போக தங்கியிருப்பதற்கும் போக்கி சாப்பிடுவதற்கும் "மடம்" என்பதாக ஒரு தனிக் கட்டிடமும் கட்டிக்கொள்வதுண்டு.

இவ்வளவு மல்லாமல் அங்குள்ள நாயர்களில் யாருடைய சம்சாரமாவது கொஞ்சம் அழகுள்ள பெண்ணாயிருக்கிறாளென்று ஒரு பிராமணன் கேள்விப்பட்டால் அந்த பிராமணன் மேற்படி பெண்ணுடைய புருஷனைக் கூட்டி வரச்செய்து, "அடே, மாதவா! உன்னுடைய பாரியாள் அதிக அழகுள்ளவளென்று கேள்விப்பட்டேன். அது வாஸ்தவமா" என்று கேட்பான். அதற்கு மாதவன் "அடியேன், எல்லாம் தங்களுடைய பாக்கியம்", என்பான். இதைக் கேட்ட பிராமணன், "அப்படியானால் அவளை நம்முடைய மடத்திற்கு வந்து ஒரு வாரம் இருந்து போகும்படி சொல்லு", என்று சொல்லுவான். ஏதாவது அழகுள்ள ஸ்திரீ தெருவில் நடந்து போவதைக் கண்டால் உடனே அவளைக் கூப்பிட்டு, "ஏ, பெண்ணே! உன்னுடைய வீட்டுப் பெயரென்ன?" என்று கேட்பான். அந்தப் பெண் தன்னுடைய வீட்டுப் பெயரைச் சொன்னவுடன், "இன்றைய ராத்திரிக்கு நான் வருகிறேன் என்று உன்னுடைய தாயாரிடம் போய்ச்சொல்லு" என்று சொல்லுவான். இம்மாதிரியாக இந்தப் பிராமணர்கள் தங்களுடைய திருப்திக்காகவே அந்நாட்டிலுள்ள ஸ்திரீகளை யெல்லாம் கடவுளைக் கொண்டு தாங்களே சிருஷ்டிக்கச் செய்ததாக எண்ணிக் கொண்டு காரியம் நடத்தி வருகிறார்கள்.

இது மாத்திரமல்லாமல் அந்நாட்டுப் புருஷர்களை நடத்துகிற மாதிரியோ இதைவிட மோசமாயிருக்கும். அதாவது யாரைக் கூப்பிடுவதானாலும் "டேய்" என்கிற சப்தத்தை முன்னால் வைத்துத்தான் கூப்பிடுவார்கள். பெயரோடு கூடி "சாமி" "அப்பன்" என்கிற பதங்கள் இருந்தால் அதைத் தள்ளி "டோய் ராமா" "டோய் கிருஷ்ணா" என்று தான் கூப்பிடுவார்களே யல்லாமல் "ராமசாமி" என்று கூப்பிடவே மாட்டார்கள். அவர்கள் வீட்டுக்குப்போனால் மேலே வேஷ்டி போட்டுக்கொண்டிருக்கக் கூடாது. அங்கைகை, கால் கை சட்டைகள் போட்டிருந்தாலும் கழட்டி இடுப்பில் கட்டிக்கொண்டு தான் போக வேண்டும். பேசும் போது ஒருகையைக் கட்டிக் கொண்டும் மற்றொரு கையால் வாயை மூடிக்கொண்டுந்தான் பேசவேண்டும். வார்த்தைக்கு வார்த்தை முன்னிலையாய்ப் பேசும் போது தாங்கள் என்பதற்கு "திருமேனி" என்றும், "திருமனசு" என்றும், "தம்பிரான்" என்றும், தன்மையில் பேசவேண்டுமானால் "அடியேன்", "அடியேன்" என்றுந்தான் பேசவேண்டும்.

இன்னும் மலையாள நாட்டில் அந்நாட்டு பிராமணர்கள் அங்குள்ள பிராமணரல்லாத மக்களுக்கும் அவர்களது பெண்களுக்கும் செய்யும் கொடுமைகளையும் நடத்தும் பான்மைகளையும் எழுதுவதென்றால் இது சமயம் எடுத்துக்கொண்ட வியாசத்திற்கு இடம் கிடையாது போய்விடும் என்று இது சமயம் இவ்வளவோடு நிறுத்தி விட்டோம்.

இப்பேர்பட்ட கொடுமைகளையும் இந்தப் பிராமணாதிக்கத்தையும் ஏழைகளின் கஷ்டத்தையும் ஒழித்து அங்குள்ள பிராமணரல்லாதாரின் சுயமரியாதையைக் காப்பாற்

அங்குள்ள பிராமணரல்லாதார்கள் வெகு காலமாகப் பிரயத்தனப் பட்டு வருவது யாவருமறிந்த விஷயம். இதன் பலனாகவே கொச்சி திருவாங்கூர் முதலிய இடங்களிலும் பிரிட்டிஷ் மலையாளத்திலும் "நாயர் ஆக்ட்" என்று சொல்லப்படும் சட்டம் ஒன்றும் நிறைவேற்றப் பட்டிருக்கிறது. ஆனாலும் அந்தச் சட்டமானது பொருளாதார விஷயத்தில் பிராமணர்களுக்கு இருக்கும் நிரந்தர ஆதிக்கத்தால் சரியான பலன் தருவதற்கில்லாமல் செய்து விடுகிறபடியால் அது விஷயத்திலும் சிறிது சீர்திருத்தங்கள் செய்ய வேண்டிய அவசியமிருந்த படியால் 'மலையாளக் குடிவார மசோதா' என்ற ஒரு மசோதாவை சட்ட சபை மூலம் கொண்டு வர ஏற்படுத்தி, அதை ஒரு தனிக் கமிட்டிக்கு விட்டு அக்கமிட்டியிலேயே வேண்டிய ஏற்பாடுகள் செய்யப்பட்டு அது அமுலில் வருவதற்கு சட்ட சபையின் மூலம் நிறைவேற வேண்டியதற்காக இப்போது சட்ட சபையில் ஒரு கூட்டம் கூட்டப்பட்டு அது நடைபெற்று வருகிறது.

இந்த மசோதா கமிட்டியில் ஏற்பாடு செய்திருக்கிறபடி நிறைவேற்றப்பட்டு விட்டால் பிராமணர் ஆதிக்கத்திற்குக் கொஞ்சம் ஆபத்து வந்து விடுமென்னும் காரணத்தினால், பிராமணக் கக்ஷியான சுயராஜ்யக் கட்சியார் சட்ட சபையில் ஒரு காரியமும் செய்ய முடியாது என்று வெளியில் வந்த பிறகும் இந்த மசோதாவிற்கு மட்டிலும் போய் சட்ட சபையின் மூலம் சில காரியங்கள் செய்து கொள்ளலாம் என்று போனார்கள்.

இந்த 5, 6-நாட்களாக சட்ட சபையில் அந்த மசோதாவைப்பற்றி நடக்கும் விவகாரங்களைக் கவனித்தவர்களுக்கு இந்த மசோதாவின் உயிர்நாடியை வாங்குவதற்குப் பிராமணர்கள் ஒற்றுமையாய் எவ்வளவு பிரயத்தனங்கள் செய்கிறார்கள் என்பதும், பிராமணரல்லாதார்கள் எவ்வளவு தூரம் கஷ்டப்படுகிறார்கள் என்பதும் விளங்காமல் போகாது. மலையாளத்துப் பிராமணர்களும் பெரிய பூஸ்திதியுள்ள சில ஜமீன்தார்களும் ஸ்ரீமான் சர் சி. பி. இராமசாமி அய்யர் அவர்களைத் தங்கள் நாட்டுக்கு வரவழைத்து பெரிய வரவேற்பும் ஆடம்பரமும் செய்ததையும் நேயர்கள் பத்திரிகைகளில் பார்த்திருப்பார்கள். இப்போதோ இதே ஸ்ரீமான் சர். சி. பி. இராமசாமி அய்யர் இந்த மசோதாவின் உயிர் நாடியை வாங்க கங்கணம் கட்டிக் கொண்டிருக்கிறார். இதற்கனுகூலமாக மற்ற பிராமண மெம்பர்களும் தங்களால் ஆனவரையிலும் கூடச்சேர்ந்து தாங்கி வருகிறார்கள்.

இம் மசோதாவின் உயிர் நாடியான சில பாகங்களை சர். சி. பி. அய்யர் எதிர்க்கும் போது சர். கே. வி. ரெட்டி நாயுடு பதில் சொல்லுகையில், "மலையாள தேசத்துப் பெண்கள் பக்குவமானால் முதல் முதல் பிராமணன்தான் அவளைப் புணர வேண்டும் என்று இருக்கிற அக்கிரமங்கள் எல்லாம் தொலைந்து போய் விடுகிறதே என்று பயப்படுகிறீர்களா," என்றும் "சர். சி. பி. அய்யரே, நீங்கள் கவர்ன்மெண்டு சார்பாய் பேசுகிறீர்களா அல்லது மனுதர்மத்தின் சார்பாய் பேசுகிறீர்களா" என்றும் கேட்டார். இது சர். சி. பி. இராமசாமி அய்யருக்கு கோபத்தை மூட்டா விட்டாலும் ஸ்ரீமான் எஸ். சத்திய மூர்த்தி அய்யருக்கு மனுதர்ம சாஸ்திரத்தைப் பற்றி பேசலாமா என்று கோபம் வந்து, சர். சி. பி. அய்யருக்கு வக்காலத்து வாங்கிக்கொண்டு, 'சர். சி. பி. அய்யர் கவர்ன்மெண்டார் சார்பாய் பேசுகிற படியால் அவரை "நீங்கள்" என்று முன்னிலைப்படுத்தி பேசியது தப்பு' என்று சிபார்சுக்கு வந்து விட்டார். உடனே ஸ்ரீமான் சர். கே. வி. ரெட்டி நாயுடு "பார்ப்பனரைப் பாதிக்கும்படியான ஒரு சிறு வார்த்தை ஏற்பட்டாலும் கூட உடனே எல்லா பார்ப்பனர்களும் கக்ஷி பேதமில்லாமல் ஒன்று சேர்ந்து விடுகிறார்கள். சர். சி. பி. அய்யருக்குப் பேசத் தெரியாதா? அல்லது ஸ்ரீமான் சத்திய மூர்த்தி அய்யர் சர்க்கார் மனுஷரா? அல்லது இதனால் ஏதாவது பொது ஜனங்களுக்கு ஆபத்து ஏற்பட்டு விட்டதா? இதிலிருந்தே பார்ப்பனர்களின் மனப்பான்மையைத் தெரிந்து கொள்ளுங்கள்" என்று சொன்னவுடன் சத்திய மூர்த்தி அய்யர் வெட்கிப்போய் விட்டார்.

மற்றொரு சமயத்தில் திவான்பகதூர் எம். கிருஷ்ண நாயரின் தீர்மானத்தை சர். சி. பி. அய்யர் எதிர்க்கும் போது சபையைப் பார்த்து "நீங்கள் இங்கு இத் தீர்மானத்தை நிறைவேற்றி விட்டாலுமே அது அமுலுக்கு கொண்டு வர முடியாது" என்றும் "கவர்னரைக் கொண்டு இந்த தீர்மானத்தை தள்ளி விடச் செய்யப்படும்" என்றும் சொல்லி மிரட்டினார். ஸ்ரீமான் எம். கிருஷ்ண நாயர் அதற்குப் பதில் சொல்லும்போது இந்த பில் விஷயத்தில் சர்க்காரார் ஜனங்களை அனுசரித்துப் போகாமல் பொறுப்பற்ற தனமாய் நடந்து கொள்வதையும், "சர். சி. பி. இராமசாமி அய்யர் ஜனங்களின் மனப்பான்மையைக் கவனிக்காமல் கொஞ்சமும் பயமின்றி நெஞ்சம் குடலும் அஞ்சாசாமல் எழுந்து நின்று 'நீங்கள் நிறைவேற்றினாலும் நான் கவர்னரைக் கொண்டு நிராகரித்து விடுவேன்' என்று சொல்லும்படியான தைரியம் வந்து விட்டதல்லவா" என்று சபையைப் பார்த்து ஓர் அதட்டு அதட்டியவுடன் சர். அய்யருக்கு நடுக்கம் வந்து "நான் அப்படிச்சொல்லவில்லை" "இப்படிச் சொல்லவில்லை" என்று மழுப்ப ஆரம்பித்து விட்டார்.

பிறிதொரு சமயத்தில் இந்த மசோதாவை இந்தத் தடவை எப்படியாவது தள்ளிவைத்து வாய்தா போட்டுவிட்டால் பிறகு இந்தக் கவுன்சிலே கலைந்து போய் விடும், அதன் பிறகு புது கவுன்சிலுக்குப் புது மெம்பர்கள்தானே வருவார்கள் என்று நினைத்து, ஒரு வெள்ளைக்காரரை விட்டு மெதுவாய் காலம் குறிப்பிடாமல் தள்ளிவைக்கும்படி ஒரு தீர்மானம் கொண்டு வந்தார்கள். அதன் வார்த்தைகள் சட்டத்திற்குப் பொருத்தமில்லை என்கிற காரணத்தால் அத்தீர்மானம் தள்ளுபடியாகப் போகும் சமயத்தில், அட்வொகேட் ஜெனரல் ஸ்ரீமான் வெங்கிட்டராம சாஸ்திரியார், அந்த வெள்ளைக்காரருக்கு வார்த்தை திருத்திக் கொடுத்தார். இந்த தீர்மானத்தை ஸ்ரீமான் எம். கிருஷ்ண நாயர் எதிர்க்கும்போது 'துரைக்கு இந்த மசோதாவின் தத்துவமும் வாய்தாவின் அவசியமும் ஒன்றுமே தெரியா'தென்றும், 'இதெல்லாம் உங்களுக்கு வேறு ஆட்கள் இருந்து கொண்டு செய்கிற காரியங்களல்லவா' என்றும் கண்டித்ததும் அட்வொகேட் ஜெனரல் ஸ்ரீமான் வெங்கிட்டராம சாஸ்திரியார் எழுந்து, "நான் திருத்தினேனே ஒழிய எனக்கும் அதற்கும் சம்மந்தமில்லை" என்று சொல்லிக் கொண்டார். கடைசியாக தீர்மானங்கள் ஓட்டுக்கு வந்த காலத்தில் சர். சி. பி. இராமசாமி அய்யர் உள்பட ஏறக்குறைய எல்லாப் பார்ப்பனர்களும் ஒன்று சேர்ந்தே ஒருபக்கத்திற்கு ஓட்டுக் கொடுப்பதும், எல்லா பார்ப்பனரல்லாதாரும் ஒன்று சேர்ந்து மற்றொரு பக்கத்திற்கு ஓட்டுக்கொடுப்பதுமாகவே இருந்து வந்தது.

இதிலிருந்து பார்ப்பனர் ஆதிக்கத்திற்கு ஏதாவது கொஞ்சம் ஆட்டம் வருவதாயிருந்தாலும் எல்லோரும் ஒன்று சேர்ந்து கொள்வதன்மூலம், பார்ப்பனர்கள் எவ்வளவு தூரம் பார்ப்பனரல்லாதாரின் அடிமைத் தனத்தை விலக்குவதில் எதிரிகளாயிருக்கிறார்கள் என்பதும் விளங்குதற்காகவே இவைகளை இங்கு எடுத்து செல்லப்பட்டது.

இந்த மசோதா விவாத விஷயத்தில் பார்ப்பனரல்லாத அங்கத்தினர்களான கனவான்கள் திவான் பஹதூர் எம். கிருஷ்ண நாயர், சர் கே. வி. ரெட்டி, ஸ்ரீமான் நரசிம்மராஜு முதலியவர்கள் நடந்து கொண்ட உறுதியும் பார்ப்பனர்களுக்கும் அவர்களுடைய அதிகாரங்களுக்கும் கொஞ்சமும் பயப்படாமல் அவர்களின் திருட்டுத்தனத்தை தெரியமாய் வெளியிட்டுக் கண்டித்த வீரமொழிகளும் தங்க நீர் துவைத்த எழுத்துக்களால் அச்சடித்து கண்ணாடிக்குள் சட்டம் போட்டு வைக்கத்தக்க சொற்களாகவே ஜொலிக்கின்றன.

இனியும் பார்ப்பனரல்லாதார் சுயமரியாதையைக் காப்பாற்றுவதற்கு இதுபோலவே அநேக மசோதாக்கள் கொண்டு வர வேண்டியிருக்கிறது. அவற்றிற்கெல்லாம் அனுகூலம் செய்யப்பட வேண்டுமானால் பார்ப்பனரல்லாதார்களையே சட்டசபைக்கு அனுப்பினால்தான் முடியும். அரசியல் சம்மந்தமாக சட்டசபையில் ஒரு காரியமும் செய்து கொள்ள முடியவே முடியாது. பார்ப்பனர்களின் கொடுமையில் இருந்து விடுதலை பெறுவதற்குத்தான் சட்டசபையைக் கொஞ்சம் உபயோகப் படுத்திக் கொள்ளலாம். அதுவும் பார்ப்பனரல்லாத அங்கத்தினர்கள் தெரிந்தெடுக்கப்பட்டால்தான் முடியுமே அல்லாமல், பார்ப்பனர்ப் பத்திரிகைகளின் மோசப் பிரசாரத்தில் மயங்கியோ அவர்களின் ஆசை வார்த்தையில் ஏமாந்தோ இன்று அவர்களுக்கு ஓட்டுக் கொடுத்து விட்டால், நாளைக்கு அப்பா என்றாலும் வாராது சாமி என்றாலும் வாராது. காரியம் ஆனவுடன் நம் தலையிலேயே காலை வைக்க வந்து விடுவார்கள். உதாரணமாக ஸ்ரீமான் சி. வி. வெங்கட்டரமணய்யங்காருக்கு பனகால் ராஜா ஜில்லா போர்டு மெம்பர் பதவி கொடுத்த மூன்றும் நாளே, ராஜாவுக்கு விரோதமாய் அவரின் விரோதிகளுடன் சேர்ந்து கொண்டு

## புளுகில் போட்டி.

(ஏழை மகன் எழுதியது.)

காங்கிரஸ் மகாநாடுகளில் கைராட்டினப் போட்டியுங் கல்விச்சாலைகளில் பந்தாட்டப் போட்டியும் 'வஸ்தாத்' பயில் வான்களுக்குள் குஸ்தி போட்டியும் நிகழ்வது வழமை. ஆனால் இப்போது அரசியல் தலைவர்கள் எனப்படுவோர்களுக்குள் புளுகில் போட்டி நடைபெறுகிறது. புளுகில் போட்டி போடும் தலைவர்களை(?)யும் பொது ஜனங்கள் நம்பி விடுகிறார்களே. இதுதான் நமக்குப் பெரிதும் ஆச்சரியத்தைத் அளிக்கிறது.

சென்னை நகர சபைத்தலைவர் திரு. சாமி வெங்கடாசலம் செட்டியார் தான் செய்து கொண்ட செய்கைக்காக ஒரு 'சிறுபொய்' சொல்ல வேண்டியது அவசியமாய்ப் போய் விட்டது. 'சிறு பொய்' என்றால் தான் வேண்டுமென்றே திரித்துக் கூறும் தவறுதலான விஷயத்தை எவரும் தெரிந்து கொள்ளாதவரை அது சிறு பொய்யாகும். ஆனால் திரு. சாமி வெங்கடாசலம் கூறிய சிறு பொய்யானது பலரால் விழித்திருந்து பார்த்துக்கொள்ளப்பட்டதால், அது பெரும் பொய்யாகி, திரு. செட்டியார் தனக்குத் தானே மிகுந்த துக்கத்துக்குள்ளாக நேர்ந்தது. அதாவது திரு. செட்டியார் கார்ப்பரேஷன் செலவில் அதன் தலைவர் என்கிற ஹோதாவில் தன் வீட்டில் டெலிபோன் வைத்துக் கொண்டதைப் பலர் ஆக்ஷேபித்தனர். அதற்கு திரு. செட்டியார், முன்னர் சர் பி. தியாகராய செட்டியார் கார்ப்பரேஷன் தலைவராகயிருந்தபோது அவர் வீட்டில் கார்ப்பொரேஷன் செலவில் டெலிபோன் வைத்துக் கொண்டார், அதனால் தானும் வைத்துக் கொண்டதாகச் சொன்னார். சர். தியாகராய செட்டியார் பேரில் இவ்வாறு கூறுவது பொய்யென்று நிரூபிக்கப்படவே, தனக்குமுன் தலைவராகயிருந்த திரு தணிகாசலம் செட்டியார் வைத்துக் கொண்டார். அதனால் வைத்துக்கொண்டேன் என்றார். இதுவும் பொய்யென்று நிரூபிக்கப்படவே தனது கூற்றை மறைப்பான் வேண்டி பல விதப் பொய் முகாந்திரங்களைக் கூறி மழுப்பத்தலைப்பட்டார். அவையும் பொய் என்பதை உலகம் அறிந்து கொள்ளவே, மிக்க வியாகூலத்தோடு மூலையில் உட்கார்ந்து அழுகத்தலைப்பட்டார்.

ஆனால் திரு. செட்டியாருக்கு கோவை திரு. வெங்கிட்டரமணய்யங்கார் ஆறுதல் கூறப் புறப்பட்டார். "என்னய்யா, செட்டியாரே! இதற்காகவா இவ்வளவு வருத்தப் படுகிறீர். தாங்கள் சொன்னதும் ஒரு பொய்யாகி விடுமா? நான் எவ்வளவோ கணக்கு வளக்கில்லாமல் ஊரெங்கும் பொய்மயமாகவே யிருக்கும்படி பொய்க்கீற்றுகள் பறக்க விட்டிருக்கிறேன். அஸ்திவார மில்லாமல் நான் கட்டிய ஆகாயக்கோட்டைகள் தங்களுடைய கூற்றுக்களை யெல்லாம் மறைக்கக்கூடியதா யிருக்கும்போது, இந்த அல்பப் பொய்க்காக எதற்காக வருத்தப்பட வேண்டும்" என்று சொல்லி செட்டியார் கண்ணைத் துடைப்பது போல், இரண்டு லெட்ச ரூபாய் தர்மம் செய்வதாக, அங்கு ரார்ப்பண விழா நடாத்தி "கலியுக கர்ணன்" என்றும் "வள்ளல்" என்றும் "தியாகி" என்றும் சம்மந்திப் பத்திரிகைகளாலும், சகோதரர் பத்திரிகைகளாலும் கூலிக்காரப் பத்திரிகைகளாலும் எழுதும்படி செய்து கொண்டார். இம்மட்டோ? தன்னுடைய தென்னை மரங்களில் கள் இறக்கப்படவே யில்லை யென்பதாகச் சொன்னார். இது சம்பந்தமாகப் பலர் பலவித ஆதாரங்களைக் கொண்டு ஐயங்கார் பொய்யை வெளிப்படுத்தி வந்தனர். இவற்றை யெல்லாம் தன்னுடைய வாய் ஜால சாமர்த்தியத்தால் மறைத்துக் கொண்டு வந்தார். முடிவில் அவருடைய மரங்களில் கள் இறக்கப்பட்டது உண்மை யென்பதாய்த் தக்க ஆதாரத்துடன் எடுத்துக் காட்டப்படவே, தான் செய்த தர்ம விளம்பர மர்மத்தையும், கள் இறக்கப்படவில்லை யென்ற பொய்யையும் உலகம் அறிந்து கொண்டதென கண்ணீர் சொரிந்து அழத்தொடங்கினர்.

அச்சமயத்தில், கோவை ஐயங்காருக்கு ஆறுதல் கூற மயிலை ஐயங்கார் வெளிவந்தார். அவர் தான் காங்கிரஸ் மா மா மா பெருந்தலைவர் மயிலை. எஸ். சீனிவாசய்யங்கார். "என்னங்கோ, திரு. வெங்கிட்டரமணய்யங்காரே! எதற்காக இவ்வளவு வியசனமும் துக்கமும் அடைகிறீர். தாங்கள் என்ன பெறாப் பொய் சொல்லி விட்டீர்? என்னுடைய பொய் அஸ்திவாரமும் அடிப்புடையும் இல்லாமல் இந்திய நாடெங்கும் செலாமணியாகிவரும் போது, தங்களுடைய பொய்யும் ஒரு பொய்யாகி விடுமா?" என்று கூறுவதைப் போல் திரு. சீனிவாசய்யங்கார் "பொய் நாடக"த்தின் ராஜபார்ட்டாக கம்பீரத் தொனியுடன் கர்ஜித்தார்.

அதாவது, திரு. எஸ். சீனிவாசய்யங்கார், தான் சென்னை காங்கிரஸ் கமிட்டித்தலைவர் என்ற ஹோதாவில், ஐக்கிய தேசியக் கட்சியாரான சுயராஜ்யக் கட்சியாரும் தேசியப் பார்ப்பனரல்லாத கட்சியாரும் சென்னை சட்ட சபையினின்று வெளியேறுவதற்குமுன், தேசியக் கட்சித் தலைவரான திரு. சி. வி. எஸ். நரசிம்ம ராஜுவிடம், பொதுத் தேர்தலுக்குப் பிறகும் அஸ்ஸாம் காங்கிரஸிலும் உத்தியோகம் ஏற்றுக்கொள்ளும் பிரச்சினைக்கு ஆதரவு கூறுவதாக வாக்களித்த விஷயத்தை ஆந்திர நாட்டில் அதிதீவிர காங்கிரஸ் பிராமணர்களால் நடத்தப்படும் "சத்தியாக்கிரகி," "ஜன்மபூமி," "காங்கிரஸ்" "கிருஷ்ணாப் பத்திரிகை" முதலியன எடுத்துக் கூறியும் திரு. ஐயங்கார் மறைத்து வந்தார். முடிவில் திரு

---

நம்பிக்கையில்லாத் தீர்மானத்திற்கு ஓட்டுக் கொடுத்ததை எல்லோரும் பார்க்க வில்லையா? அதலால் நம்மிடம் காரியம் ஆகும் வரையில் நமது நன்மைக்குப் பாடுபடப் போவதாகவே சொல்லுவார்கள். காரியம் ஆனவுடன் நம்மை எந்த ஊர் என்று கேட்பதோடு தங்கள் ஜாதி நலனுக்கும் தங்கள் ஆதிக்கத்திற்குந்தான் நாம் செய்து வைத்த வேலையை உபயோகப்படுத்திக் கொள்வார்கள். ஆதலால் வரப் போகும் தேர்தல்களில் ஏமாந்து போகாமல் ஒவ்வொரு ஓட்டரும் தங்கள் தங்கள் கடமையைச் செய்ய வேண்டுகிறோம்.

---

### "தொட்டது துலங்காது"

(7-ம் பக்கத் தொடர்ச்சி.)

அ:—பின்னை இன்னமும் என்ன வாக வேண்டும்?

கி:—நாட்டுக்கு நல்லகாலம் வரவேண்டுமானால், நமது நாட்டு பிராமணீயம் ஒழிய வேண்டும்.

அ:—அது லேசில் ஒழியாது போல் இருக்கிறதே.

கி:—அர்ஜுனா! நீ அப்படி நினைக்கவேண்டாம். இனி நமது கலியுக பத்மாசுரரான ஸ்ரீனிவாசய்யங்கார் பிராமணீயத்திற்கும் ஒரே தலைவராகப் போகிறார். அப்போது அதுவும் ஒழியும். ஐயங்கார் பிரளயம் இந்த கொடுமைகளையெல்லாம் ஒழித்த பிறகு மகாத்மா காந்தி மறுபடியும் வருவார். அப்போது உலகத்துக்கு க்ஷேமம் பிறக்கும்.

அ:—அப்படியா ரொம்பவும் சந்தோஷம்.

---

## கோயமுத்தூர் தாலுகா சுகாதார வாரக் கொண்டாட்டம்.

இவ்வருஷம் கோயமுத்தூர் தாலுகாவைச்சேர்ந்த ஒண்டிப்புதூர், தெலுங்குபாளையம், குனியமுத்தூர், வெள்ளக்கிணர், செட்டிபாளையம், பீளமேடு, போத்தனூர், பேரூர் முதலிய கிராமங்களில் சுகாதாரவாரம் கொண்டாடப்பட்டது. வார ஆரம்பத்தில் என் முயற்சிகள் பயனளிக்கத் தக்கதல்லவென்று நினைத்தேன்; விடாமழையும், என்தேக அசௌக்யமுமே என்னை அப்படி சந்தேகிக்கச்செய்தது. எனினும் என் நண்பர்களாகிய கிராமவாசிகளனைவரும் என் வேண்டுகோளுக்கிணங்கி, என்னுடன் ஒத்துழைத்து நான் கொண்ட கருமத்தைப் பூர்த்தி செய்வித்ததற்காக, அவர்களுக்கு என் மனமார்ந்த வந்தனத்தைச் செலுத்துகின்றேன்.

இவ்வருஷம் போல், அடுத்த பிப்ரவரி மாதத்திலும் எனக்குபக்க உதவியாயிருந்து, இன்னும் சிறப்பாய் நடத்திக் கொடுக்க வேண்டுமாய், இந்த தாலுகாவாசிகளை நான் மன்றாடிக் கேட்டுக் கொள்ளுகிறேன், என்று கோயமுத்தூர் ஹெல்த் இன்ஸ்பெக்டர் திரு. டாக்டர் ஜி. டி. கோபால கிருஷ்ணன் எழுதுகிறார்.

---

வாளர்கள் சி. வி. எஸ். நரசிம்ம ராஜு, டி. எ. இராமலிங்கம் செட்டியார், வி. சி. வெள்ளியங்கிரிக் கவுண்டர் முதலியோர் தெள்ளத் தெளிய எடுத்துக் காட்டவே திரு. சீனிவாசய்யங்கார் அகப்பட்டுக் கொண்டு வருந்துகிறார்.

இவ்வாறு முதலில் திரு. வேங்கடாசலம் செட்டியாரின் பொய்யில் போட்டி போட்டு திரு. வெங்கிட்டரமணய்யங்காரின் பொய் ஜெயிக்கவும், பிறகு திரு. வெங்கட்டரமணய்யங்காரின் பொய்யில் போட்டி போட்டு திரு. சீனிவாசய்யங்கார் பொய் ஜெயித்து விட்டது. திரு. சீனிவாசய்யங்கார் பொய்யை ஜெயிக்க ஆச்சாரியார் பொய் கிளம்புமோ ஐயர் பொய் கிளம்புமோ தெரியவில்லை. அரசியல் உலகில் இதுவும் ஒரு வேடிக்கை. "போகப் போகத் தெரியும் பொய்க் கணக்கன் செய்தி."

## தமிழ் 'சுயராஜ்யா'

பார்ப்பனர்களின் நயவஞ்சக ஆதிக்கம் பொங்கித் ததும்பி பூரணமாய்த் தாண்டவம் ஆடப்பெறும் தமிழ் "சுயராஜ்யா", பார்ப்பனரல்லாதார் கொடுத்த தமிழ் நாட்டு காங்கிரஸ் பணத்தைக் கொண்டு நடைபெறுகிறதென்பதைப் பலரும் அறிவர். அன்னமிட்டவர் வீட்டில் கன்னமிடும் படுபாவிகளைப் போல பார்ப்பனரல்லாதாரின் பணத்தாலேயே பிறந்து, பார்ப்பனரல்லாத சந்தாதார்களாலேயே வளர்க்கப்பட்ட தமிழ் "சுயராஜ்யா" பார்பனரல்லாதாருக்கே கேடு விளைவித்து வருகிறது. இப் பத்திரிகை பார்ப்பனரல்லாதாரின் க்ஷீனத்தைக் கோரி பார்ப்பனரல்லாதாருடன் போர்புரிந்து வருவதை உலகமறியும்.

சின்னாட்களுக்குமுன் பார்ப்பனரல்லாத கட்சியின் கூட்டம் சென்னை சௌந்தரிய மகாலில் நடைபெற்றது. "சுயராஜ்யா"ப் பத்திரிகை அக் கூட்டத்தில் கூடியிருந்தோர் அனைவரையும் "உத்தியோகம் நக்கிப் பொறுக்கிகள்" என்று மானங் கெட்டதனமாய் பெயரிடுகிறது. ஊரூராய்த் திண்டாடித் தெருவில் நின்று பார்ப்பனரல்லாதார் வீடு தோறும் அலைந்து திரியும் "உத்தியோகம் நக்கிப் பொறுக்கிகள்" "சுயராஜ்யா" பத்திரிகை ஆசிரியரின் இனத்தைச் சேர்ந்த பார்பனக் கூட்டமேயன்றி சௌந்தரிய மகாலில் அன்று குழுமியிருந்த பார்ப்பனரல்லாதவர்களன்று. இதைப்பற்றி "திராவிடன்" கூறியுள்ள முத்துப் போன்ற எழுத்துக்களை கவனிப்போம்.

"தமிழ் "சுயராஜ்யா" அற்பத்தனமாயும் அயோக்கியத்தனமாயும் எழுதத் துவங்கிவிட்டது மிகவும் வருந்தத்தக்கதாகும். "உத்தியோக நக்கிப் பொறுக்கிகள்" சௌந்தரிய மகாலில் பெருந்திரளாய்க் கூடியிருந்தவர்களனைவருமாம். வீடுதோறும் பிறப்புக்கும், கலியாணத்துக்கும், இழவுக்கும் அழையாவிட்டாலும் நாய் போல் வந்து பல்லைக்காட்டி அரையணா, ஒரு அணா பெற்றுப் பொறுக்கித்தின்பவர்கள் பார்ப்பனர்களே. நிருவாக சபை உத்தியோகங்கள் முதல், கேவலம் செருப்புத்தைத்தல்; கும்பகோணம் வேலையில் ஈடுபடல் ஆகிய இழி தொழில்கள் செய்து கால்களை நக்கிப் பொறுக்கித்தின்று வயிறு பிழைப்பவர்கள் பார்ப்பன மக்களேயன்றி பார்ப்பனரல்லாத மக்களல்ல"

இதைப் பார்த்த பின்னும்,- இவ்வாறு அந்த பார்ப்பனப் பத்திரிகையால் பார்ப்பனரல்லாதாரை ஏழேழு ஜென்மத்திற்கும் மறையாத மாசுடையோராய் இழித்துரையாடப் பெற்ற "நக்கிப் பொறுக்கிகள்" என்ற வார்த்தையைக் கேட்ட பிறகும்- தன் நரம்பிலே பார்ப்பனரல்லாதாரின் சுத்த ரத்தம் ஓடப்பெறும் எவராவது- பார்ப்பனரல்லாதாராய் பிறந்த எந்த ஆண்மையுடையோராவது இனி "சுயராஜ்யா"ப்பத்திரிகையை கையில் தொடுவாரா? கண்ணில் பார்ப்பாரா? மானம், வெட்கம், ரோஷம், சுயமதிப்பு உடைய எந்த பார்ப்பனரல்லாதாரும் இனி அப்பத்திரிகையைப் பார்க்கவும் தொடவுமாட்டார்களென்றே நம்புகிறோம்.

## "குடி அரசு" 13-ம் இதழ்.

இவ்வாரம் அச்சுப் பொறியிலேற்பட்ட இடரினின்று நமது "குடி அரசு" 12-ம் இதழ் மிகக்கஷ்டத்தோடு வெளிவந்தது. அவ்வச்சுப் பொறியில் காணப்பெறும் கோளாறினை சரிப்படுத்துவான் வேண்டி அஃதினை கழற்றி சீர்திருத்தப் போவதால் அடுத்து வரும் "குடி அரசு" 13-ம் இதழ் 25-7-26ம் தேதி வெளியேற இயலாது போமோவென சந்தேகிக்கிறோம். ஒரு சமயம் அவ்வாறு நேரின் 1-8-26-ம் தேதி "குடி அரசு" அகத்தியம் வெளிவரும். தாமதித்தால் "அரசை" அன்புடன் ஏற்று உவகை உறும் சந்தா நேயர்கள் பொறுத்தருளுவாராக.

மணவை. ரே. திருமலைசாமி,
துணை ஆசிரியன்.

## 'சுதேசமித்திர'னின் ஞானோதயம்.

ஜூலை-மீ 16-வ "மித்திர"ன் "இந்து மத தர்ம ஸ்தாபனங்கள் சரியாக நடக்கும்படி செய்யத்தக்க சட்டம் ஒன்று இயற்றப்பட வேண்டுமென்பதை எல்லோரும் ஒப்புக்கொள்வார்கள்" என்று எழுதியிருக்கிறான். மதஸிஷபத்தில் அரசாங்கத்தார் பிரவேசிக்கக் கூடாது என்று எழுதி இது வரை பாமரர்களை ஏமாற்றி வந்த பார்ப்பன மித்திரனுக்கு இப்போதாவது சர்க்காரால் சட்டம் ஒன்று செய்யப்பட வேண்டும் என்று சொல்லும்படியான புத்தி வந்ததற்கு நாம் மகிழ்கிறோம். ஆனால் இந்தப்புத்தி தானாகத் தோன்றவில்லை. ஸ்ரீமான்கள் வரதராஜுலு நாயுடுகாரும், ஈ. வெ. இராமசாமி நாயக்கரும் தேவஸ்தானச் சட்டத்தை ஆதரித்தும் அதை எதிர்க்கும் பார்ப்பனர்களின் சூழ்ச்சியைப் பொது ஜனங்கள் அறியும்படி செய்ததின் பலனாகவும் இதை ஒப்புக்கொள்ளா விட்டால் தங்களுக்கு ஓட்டுக் கிடைக்காமல் போகுமோ என்கிற பயமும் பார்ப்பன மித்திரனை "சுதேசமித்திர"னை "இந்துமத ஸ்தாபனம் சரியாக நடக்க ஒரு சட்டம் அவசியம்" என்று சொல்லும்படி செய்து விட்டது. ஆனால் "மித்திரன்" அதின் கீழாகவே "இந்த சட்டமானது தர்மங்கள் சரியாக நடைபெறும்படி செய்வதற்கு மாத்திரம் உத்தேசிக்கப்பட்டதாக இருக்க வேண்டும்" என்கிறான். அப்படியானால் இப்போதிருக்கும் சட்டம் கோயில்களில் இருக்கும் 'கல்லுசாமி'களையெல்லாம் பிடுங்கி எறிந்து விட்டு, அந்த ஸ்தானத்தில் ஸ்ரீமான்கள் பனகால் ராஜாவும் வரதராஜுலு நாயுடுகாரும், இராமசாமி நாயக்கரும் உட்கார்ந்து கொண்டு இந்தப்பார்ப்பனர்களைக் கொண்டு அபிஷேகமும் பூஜையும் செய்யும்படி கேட்பார்கள் என்று "மித்திரன்" உண்மையிலேயே பயப்படுகிறானா, அல்லது இந்த முகாந்திரத்தைச் சொல்லி அதை ஒழிக்க சூழ்ச்சி செய்கிறானா என்பதை வாசகர்கள் உணர்வார்களாக.

## சென்னை மாகாண பிராமணரல்லாத காங்கிரஸ் வாதிகளுக்கு ஓர் வேண்டுகோள்.

காங்கிரசினின்று ஒருவர் பின் ஒருவராக விலகிக்கொண்டிருக்கிறார்கள். இன்னும் சில பிராமணரல்லாதாரே காங்கிரசிலிருக்கிறார்கள். அவர்களும் கொஞ்சகாலத்திற்குள் விலகிக்கொள்ளலாமென எதிர் பார்க்கப்படுகிறது. தற்சமயம், பிராமணர்கள் தங்கள் சுயஜாதி அபிமானத்தை விட்டுக் கொடுக்காமலிருப்பதற்குத் தங்களாலான மட்டும் பல்வேறு சூழ்ச்சிகளைச் செய்தும், சில பிராமணரல்லாதாரை தங்கள் நய வஞ்சக வலையிற் சிக்க வைத்தும், அவர்களைக் கொண்டு சுய ராஜ்யத்திற்குத் தாங்கள் பாடுபடும் குலத்தினர் என தங்கள் பிராமணப் பத்திரிகைகளில் பொய்யும் புரட்டும் எழுதி ஜனங்களை ஏமாற்றப் பார்க்கிறார்கள்.

இத் தந்திரங்களை ஸ்ரீமான் ஆர். கே. ஷண்முகஞ்செட்டியார் போன்ற அறிவாளிகள் தெரியாததல்ல. ஆனால் தஞ்சை ஜில்லாவிலே மிகவும் கீர்த்தி வாய்ந்த ஸ்ரீமான் வி. மருதவனம் பிள்ளையவர்கள் கொஞ்சகாலத்திற்கு முன்புதான் அரசியல் துறையிலும், காந்தியத்திலும் ஈடுபட்டவர் என்பதை தஞ்சை ஜில்லா வாசிகளறிவர். ஆனால் பிள்ளையவர்கள் அய்யங்கார் கோஷ்டியில் தனக்கு கௌரவமிருப்பதாகவும், அவர்களாலேயே தனக்குப் பட்டம் பதவிகள் கிடைப்பதாகவும், அவர்கள் கோஷ்டியை விட்டு விலகினால் தனக்கு கௌரவம் குறைந்து பட்டம் பதவிகள் கிடைக்காதென்றும் நம்பிக்கைகொண்டு, அய்யங்கார்தான் தனக்குச் சதம் என எண்ணியுள்ளார் போலும். அந்தோ! திரு. சீனிவாச ஐயங்கார் தனது வக்கீல் தொழிலில் எவ்வளவு தந்திரத்துடன் இல்லாத தொன்றை உண்டெனச் சாதித்தும், நடந்ததை நடக்கவில்லை எனச் சாதித்தும் ஜெயம் பெறுவரோ, அதைப்போல் காங்கிரஸ் மகாசபையில் சேர்ந்துகொண்டதுமன்றி, தலைவர் பதவியைத் தாங்கிக்கொண்டு சமயத்திற்குத் தகுந்தாப்போல் நடித்துவருகின்றார்கள். இதை யுணராத பிராமணரல்லாதார் அவர் பெரியவர், பொய் சொல்லாதவர், மிகவும் நல்லவர், அவரை விட்டால் நமக்கு வேறு கதி கிடைக்காது என்று "இலவு காத்த கிளியைப்போல்" மோசம் போகிறார்கள்.

பிராமணர்களுக்கு இயற்கையிலேயே குறும்புத்தனம் அதிகம். அதை விலக்க அயனாலும் முடியாது. அவர்கள் தங்கள் காரியம் கைகூட வேண்டுமெனின் அதற்கு எவ்வெவ்வழியில் நடக்க வேண்டுமோ அதை விட்டுக்கொடுக்காமல் நடந்து காரியத்தில் ஜயம் பெறுவர். பின்னர் தாங்களே உயர்ந்தவர்கள் மற்ற ஜாதியாரெல்லாம் தாழ்ந்தவர்கள் என்று மதிக்கும் சுபாவமுள்ளவர்கள். ஆகையால், பிரமணரல்லாதவர்களே! உங்கள் மதிப்பைக் காப்பாற்றிக் கொள்ள வேண்டுமானால், வீறுகொண்டெழுங்கள்! தேசியப் பிராமணரல்லாதார் காங்கிரஸ் மகாநாடு விரைந்து கூட்டி பிராமணரல்லாதார் முன்னேற்றத்திற்கு வழி தேடிக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறேன்.

M. S. பாபு சாயபு, கும்பகோணம்.

*தமிழ் நாட்டுத் தன்னலங் கருதாத் தேசாபிமானிகளே!*

## விடிந்தும் தூக்கமா?.

—————:o:—————

தேசம் மெச்சும் தியாகமூர்த்திகாள்! உலகப் பெரியாராம் காந்தி அடிகளாரின் தலைமையின் கீழ் உறம் பெற்றிலங்கிய ஒத்துழையாக் காலத்தில் அப்பெரியாரின் கட்டளையைச் சிரமேற்கொண்டு தமதின்னுயிர்க் காதலிகளையும் அருந்தவப் புத்திர புத்திரிகளையும் வயோதிக தாய் தந்தையர்களையும் இன்னும் பல லௌகிக வாழ்க்கைக் குரிய சகல சம்பத்துகளையும் பொருட்படுத்தாது நமது மாபெரு மன்னையாம் பாரதத் தாயின் விடுதலையே பெரிதெனக்கொண்டு இயம்பொணு இன்னலுக்கிலக்காகி சிறைச்சாலையைத் தவச்சாலையென மதித்துச் சென்ற நுங்களின் செப்புதற்கியலாத் தியாகத்தையும், அவ்வொத்துழையாக் காலத்தில் ஓடி ஒழிந்தவர்களும், அக்காலத்தில் அதிகார வர்க்கத்தினரின் அடிவருடிக்கொண்டு நுங்கள்போன்ற தேசபக்தர்களைச் சிறைக்கோட்டம் அனுப்ப உறுதுணையாய் நின்றவர்களும் நம் புண்ணிய பூமி எங்கனும் தமதரு மந்த பத்தாக்களை அடக்குமுறையெனும் அதிகாரவர்க்க அட்டகாசப் பேய்க் கிரையாக்கிய பிரிவாற்றாமையால் புலம்பி அழும் நம் பெண் தெய்வங்களின் துக்கதினத்தில் மிருதுவான பஞ்சு மெத்தையோடமைந்த சப்ரமஞ்சத்திலே காம்பாய்ந்த மலர் பரப்பி தமதில்லக்கிழத்திகளுடன் சரச சல்லாப கேளிக்கைகள் புரிந்து இன்பந் துய்த்த தன்னலம்பேணிகளும் இன்று நாட்டுக் குழைப்பவர்போல் வேஷம்பூண்டு ஊத்தை வாய்திறந் துளர்வதொன்று செய்வது பிறிதொன்றுமாய் அன்னியராட்சியை நீடிக்கச் செய்வதன்றி நம் தமிழ் நாடு சம்பந்தப்பட்டவரையில் உயர்நோக்கங் கொண்டிலங்கிய காங்கிரஸ் சபையை தம் வயப்படுத்தி தேச மக்களை அல்லோல கல்லோலப்படுத்தி வருவதைச் சிந்திக்கின் கடுந்தவ யோகிகளும் கொடுஞ்சினங் கொள்வரெனின் என்போன்றார் நிலையை இயம்புதலும் வேண்டுமோ!

பெரியோர்களே! உலகப்பெரியார் வசப்பட்டு மக்களின் நலங்கருதி உழைக்கும் உண்மையாளர்க்கு மட்டும் இடங்கொடுத்துதவிய காங்கிரஸ் மகாசபை, எச்சண்டாளரியற்றிய சூதாலோ, இன்று, பகவானால் படைப்பிக்கப்பெற்ற மனிதரிலொரு சாரரைப் பார்த்தால் பாவம், தொட்டால் தீட்டு, எனச் செப்பித்திரியும் வைதீக வானரங்களும் வறுமைப்பிணியை வேரறக்கெல்லும் சக்திவாய்ந்த கதராடை அணிந்திடில் எனக்கின்பம் நல்கும், ஆனால் இல்லக்கிளத்தி பிணக்குறுகின்றாள், அத்தெய்வம் பிணக்குற்று வாடிவதங்க நான் கதராடை உடுத்தேன் எனச் சாற்றித்திரியும் நித்தியகத்திகளாம் அசத்திய மூர்த்திகளுக்கும், வேசிகளுங் காறியுமிழு வண்ணம் உளறித்திரியும் கடையோர்களுக்கும் இன்னும் செப்பத்தகாத அத்தனை இழிதுறையிலறங்கிய மாந்தர்களின் மாய்மாலத்தில் சிக்குண்டுழல நேர்ந்தது. தமிழ் நாட்டுத் தமிழ்த் தலைவர் பெருமான்களே! காலிகள் பூமி கண்டதே காட்சி, கொண்டதே கோலமெனத் திரியும் இன்றைய காங்கிரஸ் சபையார், தியாகமூர்த்திகளாம், உண்மைத் தொண்டர்களாம், ஏழை இரட்சகர்களாம், நுங்களுக்கென்ன வேலை? அழிந்த நந்தனத்தில் ஆடுபேய்ந்தாலென்ன? கழுதை மேய்ந்தாலென்ன! என்ற பேருரையைச் சிந்தித்தன்றோ புறக்கணித்து துறக்கும் சத்தியமூர்த்தி, சடாபதி முதலியவர், காந்தி எம்பெருமான், காங்கிரஸ் கண்டனையே மறந்து மக்கள் துயர் தணிக்கவல்ல கதர் தீண்டாமை போன்ற கைங்கரியத்தில் தம் முழு வல்லமையும் செலுத்தி உழைக்கின்றார். மர்மமுணர்ந்தும் மௌனமேன்? வீணே தேசம், தேசம் காங்கிரஸ், காங்கிரஸ் எனச்சாற்றி நுங்கள் பெயரைக் கூட்டமாய் தமிழர் முழங்கலை தன்னலமே உருவெடுத்த அன்றும் இன்றும் என்றும் நம் தாய்நாட்டைப் பாழ்படுத்திவரும் பார்ப்பனரின் பாதம் வருடித்திரிய பக்குவப்படுத்திவிட்டீர்கள். அவ்வாறாயின் தங்கள் பிற்கால சந்ததிகளின் சாபம் பக்கத்திலுள்ளதென்பதை நினைப்பூட்டுகிறேன். நமது தவப்பயனால் தென்னாட்டுத் திலகரென்ன ஸ்ரீயுத வரதராஜுலு நாயுடுகாரும், பார்ப்பனரன்றி ஏனையோர் கழுத்துக்குகட்கமாய் விளங்கி வரும் ஸ்வராஜ்யகட்சியின் சூழ்ச்சியினின்று மீண்டார். கல்வி அரசு திருவாளர் கலியாணசுந்தர முதலியாருக்கும் ஸ்வராஜ்யக் கட்சியினிடம் கசப்பேற்பட்டு விட்டது. அப்பெரியாரும் மீண்டார். விடிந்தும் தூக்கம் வேண்டாம்! இப்பருவமே தமிழர் கோட்டைக் கட்டுவதற்குரிய நாள். எழுங்கள்! வீறுகொண்டெழுங்கள்! பக்குவம் மிக்க பொருந்தியுள்ள இச் சுபதினத்திலேயே, 20-6-26-ந் தேதி வெளிப்போந்த "குடி அரசு" பத்திரிகையின் உயற்றிய சிபார்சுக்கொப்ப மாயூரமணிகளாம் ஸ்ரீயுத சின்னையா பிள்ளை, எஸ். இராமநாத பிள்ளை, தண்டபாணிப்பிள்ளை தென்னாட்டுத் திலகர்பெருமான் வரதராஜுலு நாயுடு, ஈரோடு ........... ஸ்ரீயுத இராமசாமிநாயக்கர், சென்னை யப்பதி சக்கரை வள்ளீரர் ஸ்ரீயுத ஆரியா, 'கல்வி யரசு' கல்யாணசுந்தர முதலியார், தலைநகர் மௌலானாறப் இவர்கள் போன்ற இன்னும் பலர், உண்மைத் தலைவர், பெருமான்கள் கூடி, தக்க ஆலோசனை மிக்க செட்டின் நலங்கருதி யுழைக்க ... மக் சங்கம் கண்டு அச்சங்க வாயிலாய் ... வில்லாப் பெரியாராம் காந்தியின் உயற்றிய திட்டங்களாம் கதர் தீண்டாமை போன்ற நிர்மாணத்திட்டங்களை வேற்றி ஸ்வராஜ்ய மென்னும் சாம்ராஜ்யம் பெற்று அச்சாம் ராஜ்யத்தில் மக்கள் ஜாதி மத ஜய பேதா பேதமின்றி இன்பமடைந்த வாழ்க்கை நடத்தப் பாடுபட பல்லாயிரங் கோடிப் பணிவுடன் வேண்டுகிறேன். எல்லாம் வல்ல நமதம்மை தாய் கிருபை பாலிப்பாளாக.

ரு. க. ...
நாத்...

---

13-நாவல்கள் நிறைந்த

## ஆனந்த கதாகல்ப...

இதில் அநேக அபூர்வ நாவல்கள், ... சயக் கதைகள், ஆனந்த நாடகங்கள், ... டங்கள், விநோதங்கள், கடிதங்கள், ... கதைகள், பாயாப்படங்கள், அழகிய ... ரங்கள், வியாசங்கள் 500 குடும்ப ரக... கள், 300 ஆனுடவ போதனைகள், ந... கீதங்கள், இன்னும் அநேக விஷயங்க... உள்ளன. முன் சம்பந்தமில்லாத த... தனி வால்யங்களாகும். 3-ம் வால்யம் ரூ... 4-ம் வால்யம் ரூ. 3.

ஆனந்த கதா கல்ப நிலயம் ஸ்ரீரங்கம்.

---

# ஆனந்த குணபோதினி

ஒரு நூதன உயர்தர தமிழ் மாதப் பத்திரிகை

பிரசித்த அநுபவஞான சாஸ்திரி இதன் ஆசிரியராய் விளங்குகிறார்.

இத்தகைய நவீன ஸஞ்சிகை இதுவரை வெளிவந்ததில்லை. இது தமிழ் அறிந்த ஒவ்வொருவர் அகத்துள்ளும் புகுந்து நிலவும் உன்னதம் வாய்ந்தது. சித்திரப்படங்களுடன் திகழ்வது. கல்விச் செல்வம், பொட்செல்வம் பெருகி இன்பம் ஓங்குதற்குரிய வியாசங்களால் ஒளிர்வது. அறிவை விளக்கி உற்சாகத்தைக் கொடுப்பது. நன்னடக்கையும், லௌகிக யுக்தியும், பாஷை ஞானமும், தேசாபிமானமும், ஈசுவர பக்தியும், ஆழ்ந்த யோசனையையும் உண்டாக்கக் கூடியது. எல்லா மதஸ்தர்களுக்கும், எல்லா ஜாதியார்களுக்கும் ஏற்றதாய் நல்ல விஷயங்கள் இருக்கப் பெற்றது. சொல் நயம் மிகுந்து தமிழ் உலகமெல்லாம் ஜொலிக்கும் படியாயிருப்பது "ஆனந்த குணபோதனி"தான். ஆடவர், மகளிர், பெரியோர், சிறியோர், எவர் கையிலும் இப்பத்திரிகையை இனிக் காணலாம்.

இதில் "ஆனந்த தரிசனம்" "பழமொழிக் குறிப்புகள்" 'பத்திரிகா சாரம்" "பெண்கள் பக்கம்" "பிரபஞ்ச தரிசனம்" "விகடப் பிரதாபன்" "சென்ற மாதம்" என்ற தலைப் பெயர்களின் கீழ்வரும் ஒவ்வொரு விஷயங்களும் சிந்தைக் கினிய செவிக்கினிய வாய்க்கினிய அலங்கார வசனமழையாய் விளங்கும். இப்பத்திரிகையே எவ்விஷயத்திலும் வெகு சிறந்ததென்பதை தங்களுடைய அநுபவத்தில் தாங்களே அறிந்து கொள்ளலாம். ஆனந்த குணபோதினியின் சொற்ப சந்தாவை உற்று நோக்குங்கள். வருஷச் சந்தா ரூபாய் ஒன்றே (ரூ-1) இன்றே எழுதுங்கள், உடனே சேருங்கள்.

தி. இராஜகோபால் முதலியார்,
புரோப்ரைட்டர், "ஆனந்த குணபோதினி" ஆபீஸ்,
302, தங்கசாலைவீதி, சென்னை.

## தென் இந்திய ஆதிதிராவிட பாலியர் ஐக்கிய சங்கம், பம்பாய்.

நமது சங்கத்தின் 10-வது பொதுக் கூட்டம் 27-6-26ல் ஞாயிற்றுக்கிழமை இரவு 8-30-மணிக்கு சங்கத்தின் அறையில் திரு. த. வ. சுடலை முத்து அவர்களின் அக்கிராசனத்தின் கீழ் கூடியது. அன்று சுமார் 30 பேர்களுக்கு அதிகமாகவே விஜயம் செய்திருந்தனர்.

எல்லோரும் எழுந்து நின்று திரு. கா. அ. பால கிருஷ்ணன் அவர்களால் கடவுள் வணக்கம் பாடப்பட்டது. வரப்போகும் சட்ட சபைத்தேர்தலுக்கு திரு. ஆர். வீரய்யன் அவர்களையே தேர்ந்தெடுக்கும் வண்ணம் கருணை நிறைந்த கவர்ன்மெண்டாரை இக் கூட்டம் கேட்டுக் கொள்ளுகிறது என்ற தீர்மானம் நிறைவேறிய பின் கடந்த கூட்டத்தின் வர்த்தமானங்களை எல்லாம் காரியதரிசி அவர்களால் வாசித்துக் காண்பிக்கப்பட்டது.

இந்த சங்கத்தில் பொக்கிஷதாராயிருந்தவரான திரு. டி. எஸ். இராமசாமி அவர்கள் தனது பலவித கஷ்டத்தால் சங்கத்திற்கு சந்தா தொகையை செலுத்த முடியவில்லை என்று ராஜினாமா செய்து சங்கத்திலிருந்து விலகிக் கொண்டார்.

அதற்குப்பின் அக்கிராசனர் எழுந்து இச்சங்கத்தை பரிபாலிப்பதற்கு ஒரு பொக்கிஷதார் வேண்டுமென்று எடுத்துக் கூறி தன் ஆசனத்தில் அமர்ந்தார். அதன் பின் திரு. கா. அ. பால கிருஷ்ணன் அவர்கள் எழுந்து மடாதிபதியாக இருப்பவரான திரு. தி. பு. மாட சுவாமி அவர்களை நியமிக்க வேண்டுமென்று ஒரு தீர்மானம் கொண்டு வரப்பட்டது. அதை திரு. உ. ந. ஆசீர்வாதம் அவர்களால் ஆமோதிக்கப்பட்டு சபையோர்களால் ஏற்றுக் கொள்ளப்பட்டு அவரை பொக்கிஷதாராக நியமிக்கபட்டது. பின் அவருக்கு சங்கத்தின் நன்றி அறிதலாக மலர்மாலை சூட்டப்பட்டது.

அன்னவர்க்குப் பதிலாக ஒரு மடாதி தெரிந்தெடுக்க வேண்டுமென்றும் திருநாம். எஸ். அய்யா குட்டி அவர்களால் பிரேரபணை கொண்டு வரப்பட்டது. அதாவது திரு. உ. ந. ஆசீர்வாதம் அவர்களையே எடுத்துக் கொள்ளப்படுமென்று கொண்டு வந்ததை திரு. பி. த. பெருமாள் அவர்களால் ஆமோதிக்கப் பட்டபின் அவரை மடாதிபதியாக எடுத்துக் கொள்ளப்பட்டது. அவருக்கு சங்கத்தின் நன்றி அறிதலாக மலர் மாலை சூட்டப்பட்டது.

திரு. கா. அ. பால கிருஷ்ணன் அவர்களால் கல்வியால் எவ்விதத்திலும் முன்னேற்றம் அடையலாம் என்பதாயும் ஒரு சொற்பொழிவு நிகழ்த்தினர். அவருக்கும் சங்கத்தின் நன்றி அறிதலாக மலர் மாலை சூட்டப்பட்டது. அவர் பின் வந்தனம் கூறி தன் ஆசனத்தமர்ந்தார்.

அக்கிராசனர் முடிவுரையாக எழுந்து நாம் இவ்விதம் இவர் என்று ஒவ்வொருவரும் விலகிக் கொண்டோமானால் நாம் எவ்விதம் முன்னேற்ற அடையலாம் என்பதாயும் சில சில உதாரணங்களை எடுத்துக் கூறி சொற்பொழிவு நிகழ்த்தினர்.

திரு. மு. ப. பால்யா அவர்களால் கடவுள் வணக்கம் பாடப்பட்டு இரவு 12-மணி அளவில் கூட்டம் வெகு அமைதியாய் கலைந்தது.

R. S. S. சுந்தர ராமாநுஜம்.
காரியதரிசி.

## மன்னார்குடி தாலூகா ஆதிதிராவிடர் அபிவிருத்தி சங்கம்.

திருக்களர் 12-6-26-உ மாலை 1-மணிக்கு இவ்வூருக்குக் கீழ் புறமாயுள்ள சேரியின் தென்னந் தோப்பில் அமைக்கப் பெற்ற பந்தலின் கீழ் திரு. சுத்தாநந்த பாரதியார் தலைமையில் திருவாரூர் தேசாபிமான சங்கத்தாரால் ஆதிதிராவிடர்களின் முன்னேற்றங் கருதி அவர்களின் பொதுக்கூட்டமொன்று கூட்டி வைக்கப் பெற்றது. அதற்கு உள்ளூர் வெளியூர் முதலிய இடங்களிலிருந்து சுமார் 200 பேர்கள் வரை குழுமி இருந்தனர். தேசாபிமான சங்கக் காரியதரிசியாகிய திரு. வி. எஸ். இராமன் பாரதியார் அவர்களை சபையினருக்கு அறிமுகம் செய்து வைத்து அவரை சபைக்கு தலைமை வகித்து கூட்டத்தின் வரலாறுகள் யெடுத்துரைக்குமாறு சொல்ல, அப்பணியை ஏற்று பாரதியார் அவர்கள் ஒரு மணி நேரம் வரை அவர்களின் முன்னேற்றங்களுக்கு அவசியமான வைகளை எடுத்துச் சொல்லி அமர்ந்தார்கள். பின்னர் கீழ் வரும் தீர்மானங்கள் செய்யப்பட்டு கூட்டம் இனிது நிறைவெய்தியது.

### தீர்மானங்கள்.

1. மன்னார் குடித் தாலூக்காவிலுள்ள ஆதிதிராவிடர்களின் முன்னேற்றங்கருதி உழைப்பதற்கென நிரந்தரமாய் ஓர் சங்கம் ஸ்தாபிக்க இக் கூட்டம் கூட்டப்பட்டபடியால் இன்று முதல் இச்சங்கம் ஆதிதிராவிடர் அபிவிருத்தி சங்கமென அழைக்கப்படவேண்டும்.

2. இச் சங்கத்தின் நோக்கம் கடவுள் பக்தி கல்வி கைத்தொழில் விவசாயம் வியாபாரம் சுகாதாரம் முதலிய நாகரீக வழிகளில் இச் சமுகத்தினரை தீவிரமாய் ஈடுபடச் செய்து சுய மதிப்புடன் வாழச் செய்வதேயாகும்.

3. இச்சங்க வேலையை சரி வாகவனித்து அபிவிருத்திக்குக் கொண்டு வர தற்கால ஏற்பாடாய் அடியிற்கண்டவர்கள் காரியக் கமிட்டியாராய் ஏற்பாடு செய்யப்பட்டது.

4. இவர்கள் அங்கங்குள்ள சேரிகளிற் சென்று சங்கத்திற்கு அங்கத்தினர்கள் சேர்த்து அவர்களுக்குள் ஏற்படுத்தி இருக்கும் சந்தாவாகிய மாதம் ஒரு குறுணி நெல்லை அவ்வச்சேரியிலுள்ள நாட்டாண்மைக்காரர் வசம் செலுத்தச் செய்து அது சரி வாக் காப்பாற்றப் படுகிறதா என்று கவனிப்பதோடு கூட இச் சமுகத்திற்கென உழைக்க முன் வரும் மகான்களுடன் ஒத்துழைத்து சங்க அபிவிருத்திக்கான வேலையை செய்து வர வேணுமாய் வேண்டுகிறது.

1. வ. ரெங்கவாக்காரர் அக்கிராசனர்.
2. அ. காமாச்சி வாக்காரர் காரியதரிசி.
3. பக்கிரி வாக்காரர்
4. செ. பக்கிரிவாக்காரர்
5. கா. அமிர்த வாக்காரர்.


ஆயிரக் கணக்கான நற்சாக்ஷிப் பத்திரங்களும் தங்க மேடல்களும் பரிசுபெற்றது.

உலகப் பிரசித்திபெற்ற

### மஹா சந்தனாதி தயிலம்.

இந்த தயிலமானது மூளைக்கும், கண்களுக்கும் குளிர்ச்சியைத் தரக்கூடிய அநேக பச்சிலை மூலிகைகள் சேர்ந்தது.

இத் தயிலத்தை வாரம் இருமுறை ஸ்நானம் செய்து வந்தால் கை, கால், கண் எரிச்சல், கண்ணில் நீர் வடிதல், கண் சிகப்பு, நித்திரையின்மை, தலைநோய் மண்டைக் குத்து, மூளைக்கொதிப்பு, காதில் வலி, சீழ் வருதல், பீனிசம் முதலிய பலவித நோய்களையும் குணப்படுத்தக்கூடியது.

இத்தயிலத்தை உபயோகித்த கனவான்கள் புகழ்ந்து எழுதும் கடிதங்கள் நாள் தோறும் வந்துகொண்டே யிருக்கிறது. இத்தயிலத்தை மேல்சொன்ன நோயுள்ளவர்களும், யாதொரு நோயுமில்லாத ஆண், பெண் யாவரும் உபயோகிக்கலாம். ஒரு முறை பரிக்ஷித்துப் பார்த்தால் உண்மை விளங்கும். பத்தியமில்லை.

24 அவு. பாட்டல் ரூ. 4—0—0
12 அவு. பாட்டல் ரூ. 2—2—0
வி. பி. தபாற்செலவு பிரத்தியேகம்.

### சாலாமிசிரி லேகியம்.

சிறந்த தாதுபுஷ்டி மருந்து.

இந்த லேகியத்தை சில நாள் சாப்பிட்டு வந்தால் குறைவற்ற ஆண்தன்மை உண்டாகுமுடன், கைகால் அசதி, இடுப்புவலி, பலஹீனம், நரம்புத்தளர்ச்சி, சொற்பனஸ்கலிதம், சம்போக காலத்தில் உண்டாகும் துரிதஸ்கலிதம் முதலிய கொடிய வியாதிகளை நீக்கி, ராஜகருவிகளுக்கு வலுவைக்கொடுத்து, தளர்ந்த நரம்புகளை கெட்டிப்படுத்தி, இரத்தத்தையும், வீரியத்தையும் விருத்தி செய்து நல்ல திடகாத்திர சரீரத்தை உண்டாக்கும். பத்தியமில்லை.

ஒரு சேர் டப்பி விலை ரூ. 2—8—0
வி. பி. தபாற்செலவு ரூ. 0—8—0

விலாசம் தெரிவிப்பவர்களுக்கு பலவிதமான மருந்துகள் விபரம் அடங்கிய கேட்லாக் இனமாக அனுப்பப்படும்.

டி. சி. சிங்காரம் அண் கோ.,
சித்த ஆயுர்வேத ஔஷதசாலை,
தெப்பக்குளம் போஸ்டு திருச்சினாப்பள்ளி.



பண்டித எஸ் எஸ். ஆனந்தரின

### மஹாசந்தனாதித் தைலம்.

தைலங்களுக்கெல்லாம் தலைமையானது!
வெயில் காலத்திற்கு மி உள்ளது!!

இம் மகா சந்தனாதி தைலத்தை அரசர்களும் ஆங்கில மருத்துவர்களும், ஐக்கோர்ட் ஜட்ஜிகளும், வக்கீல்களும், கல்வி கற்கும் மாணவர்களும் ஆண்டு அநுபவித்து நற்குணங்களைப் புகழ்ந்து கூறியிருக்கிறார்கள். அவைகளை நமது மருந்து விலைப்பட்டியின் கவில் காணலாம்.

24-அவுன்ஸ் புட்டி 1-க்கு ரூ. 4—4—0
12-அவுன்ஸ் 2–4–0. 6-அவுன்ஸ் 1–3–0

தமிழ் மருத்துவ சாலை,
220 தங்கசாலைத் தெரு, சென்னை

சற்குருவே துணை.

# ஸ்ரீ நமசிவாயகுரு தமிழ்சித்த ஆயுள் வேத வைத்தியசாலை, கோயமுத்தூர்.

இக் கோயமுத்தூரிலும் சென்னை முதலான விடங்களிலும் தீராதெனக் கைவிடப்பட்ட கொடிய வியாதிகளை வெகுசீக்கிரத்தில் சவுக்கியம் செய்து அநேக நற்சாக்ஷிப் பத்திரங்களும் பரிசுகளும் மெடல் சங்கிலி முதலியவை பெற்றவரும் ஸ்ரீ நமசிவாய குரு தமிழ் சித்த ஆயுள் வேத வைத்திய சாலை அதிபருமாகிய கோ. ந. முருகைய பண்டிதர் அவர்களால் தயார் செய்யப்பட்டு உலக பிரசித்தி அடைந்து வரும் ஔஷதங்கள்.

## மேக ராஜாங்க மதன விந்தாதி லேகியம்.



மேலேகண்ட மேகராஜாங்க மதன விந்தாதி லேகியத்தை காலை மாலை இரு வேளையாக ஒரு மண்டலம் சாப்பிட்டு வருவதினால், 20 வகை மேகத்தை போக்கி திரேகத்தை புசும் பொன் போல் செய்வது மன்றி, சிலேற்பனம் 96ம் கிரந்தி, அரையாப்பு, சூலை, க்ஷயம், ஈளை இருமல், மந்தாரகாசம், காமாலை, சோகை, பாண்டு, குன்மம் 8-ம் கிரிச்சனங்கள் 6-ம் வாய்வு 26ம் பித்தம் 40-ம் இலிங்க புற்று, ஸ்திரிகளுக்கு யோனி புற்று, வெள்ளை, மஞ்சள் வெள்ளை, பிர மேகம் சொறி கரப்பான், மேக ஊறல், தண்டில் புண், கண்ட மாலை, மகோதிரம், நீராமை, கவுசி, உள மாந்தை, அஸ்திஜுரம் அஸ்திவெட்டை, உஷ்ண வாய்வு அரோசகம், அன்னத்துவேசம் வாந்தி, விக்கல், கால்கை எரிவு, பெரும்பாடு, எலும்பு புருக்கி நோய், மூல வாயுவு, மூலத்தில் ரத்தம், கிரு கிருப்பு மயக்கம், நித்திரை, ஸ்திரிகளுக்கு கெற்ப நோய் 7ம் ஸ்திரிகள் மலடியாயிருந்தால் கெற்பம், நீரடைப்பு, சதையடைப்பு, துர்மாங்கிச அடைப்பு, சீதக்கடுப்பு, முதலான கொடிய ரோகங்களை சுகப்படுத்தி தேகம் சிவந்து மின்னும் இந்திரியம் இருகி கட்டும் இதை வயோதியர்கள் சாப்பிட்டு வருவார்களானால் ஜீவாதாரநரம்புகள் முருக்கேறி தாது விர்த்தியையும் ஆண்மையையும் உற்சாகத்தையும் தேகாரோக்கியத்தையும் ஆனந்த சுகத்தையும் கொடுப்பதில் இதற்கு நிகரான லேகியம் வேறேயில்லை யென்று உறுதியாய் கூறுகிறேன். ஆண் பெண் யாவர்களும் சாப்பிடலாம் ஒரு தரம் வாங்கி அநுபவிப்பீர்களானால் இதன் உண்மை நன்கு விளங்கும். பத்தியமில்லை.

48-நாள் சாப்பிடக்கூடிய லேகியம் சேர் 1-க்கு விலை 5-0-0
24-நாள் ,, சேர் $\frac{1}{2}$-க்கு விலை 2-8-0
12-நாள் ,, சேர் $\frac{1}{4}$-க்கு விலை 1-4-0
வி. பி. சார்ஜ் பிரத்தியேகம்.

---

**குணத்திற் சிறந்தது! விலை குறைந்தது! பரிமளமிகுந்தது!!!**

## சர்வ மேகங்களுக்கும் மகா ராஜாங்க சுகந்த பரிமளாதி ஸ்நானத் தைலம்.

மேலே கண்ட சுகந்த பரிமளாதி ஸ்நானத் தைலத்தை ஆண் பெண் யாவரும் ஸ்நானம் செய்து வருவதாலும் நித்தியம் தலையில் தடவி தலைவாரி வருவதினாலும் தீரும் வியாதிகள், மேகம், நீரெரிவு, நீர் எரிச்சல், கிரிச்சனம், க்ஷயரோகம், கண்ணெரிவு, கண் புகைச்சல், கைகாலெரிவு, பிரமேகம், ரணம், கிரந்தி கற்றாளை நாத்தம், அஸ்திஜுரம், அஸ்தி வெட்டை, உள் வெட்டை, தாது நஷ்டம் பித்தத்தாலுண்டாகும் மயக்கம் புண் புரை முதலானவைகளும் குழந்தைகள் முதல் ஆண் பெண் யாவர்களும் தலைக்கு பத மிட்டு வாரி வந்தால், தலையில் மேகத்தினாலுண்டாகும் பொடு அதினால் சகிக்க முடியாத அரிப்புண்டாகி கோதுமை தவிடுபோல் உதிருகின்றதும் மாறிப்போகும். இந்த தைலமானது எங்கள் முன்னோர்களால் கையாண்டு வந்ததும் என் அநுபவத்துக்கு வந்து ஆயிரக்கணக்கான ரோகிகளுக்கு சகல வியாதிகளையும் சவுக்கியப்படுத்தி இருக்கிறேன். மேற்படி சுகந்த பரிமளாதி ஸ்நான தைலமானது யாதொரு நோய் வராமல் பாது காப்பதோடு ராஜ கருவியாகிய மூளைக்கு குளிர்ச்சியையும் கண்களுக்கு பூரண சந்திரன் போன்ற குளிர்ந்த பிரகாசத்தையும் திவ்விய தேஜஸ்ஸையும் ஞாபக சக்தியையும் உற்சாகத்தையும் தேகாரோக்கியத்தையும் கொடுக்குமென்பதில் சந்தேகமில்லை. பத்தியமில்லை.

☞ 24-அவுன்ஸ் கொண்ட சீசா 1-க்கு விலை 5—0—0, ☞ 12-அவுன்ஸ் கொண்ட சீசா 1-க்கு விலை 2—8—0
☞ 6-அவுன்ஸ் கொண்ட சீசா 1-க்கு விலை 1—4—0 வி. பி. சார்ஜ் பிரத்தியேகம்.

---

## வசந்த குஸுமாகர கஸ்தூரி வாய்வு குளிகை.

மேலேகண்ட கஸ்தூரி வாய்வு குளிகையானது தங்கம், வெள்ளி, முத்து, பவளம் தாம்பிரம் முதலாகியவைகளாலும் உயர்ந்த சரக்குகளாலும் பெரும்பாலும் சாஸ்திர ரீதியாய் மிக்க பிரையாசையுடன் யாவரும் எளிதிலடையும்படி சித்தம் செய்யப்பட்ட இந்த கஸ்தூரி வாய்வு குளிகையை உபயோகித்து வருவதினால் உஷ்ணத்தினாலுண்டாகும் வாய்வு, மாரடைப்பு, இடுப்புவலி, வயற்றுப்பிசம், நீர்கட்டு, பெண்களுக்கு கெற்பபையிலுமுள்ள ரணம், அதனால் சீவுண்டாகி வயற்றில் குத்தல், வெள்ளை விழுதல், சகிக்க முடியாத வயற்றுவலி, இவ்வித வியாதிகளுக்கு இங்லீஷ் வைத்தியர்கள் வயிற்றை ஆப்பிரேஷன் செய்து பார்க்காமல் நிவர்த்தி செய்ய முடியாதென்று முடிவு சொன்ன வியாதிகளை அநேகர்களுக்கு எங்களுடைய வசந்த குஸுமாகர கஸ்தூரி வாய்வு குளிகையினால் நாலு ஐந்து வேளையில் பூரண சொஸ்தப்படுத்தி அதனால் பரிசுகளும் மெடல்களும் சங்கிலி முதலானதும் பெற்றிருக்கிறேன்.

மேல்கண்ட வசந்த குஸுமாகர கஸ்தூரி வாய்வு குளிகை அற்புத குண முடையன என்பதிற் சற்றும் சந்தேகமில்லை.

☞ 12-மாத்திரை கொண்ட சீசா 1-க்கு விலை 1—4—0 வி. பி. சார்ஜ் பிரத்தியேகம்.

உபயோகப்படுத்தும் விபரம் மருந்துடன் அனுப்பப்படும்.

☞ ஏஜண்டுகள் தேவை தகுந்த கமிஷன் கொடுக்கப்படும்.

மருந்து கிடைக்குமிடம்:—
**பழனிவேல் பிள்ளை,**
சோல் ஏஜண்டு, பெரியகடை வீதி, கோயமுத்தூர்.

## சென்னை அரசாங்க சுதேச வைத்தியசாலையும் சிகிச்சாசாலையும்.

நீண்ட காலமாக சுதேச ஜனங்களுக்கு பேருதவியாயிருந்த சுதேச வைத்திய முறைகள் கவர்ன்மெண்டின் ஆதரவின்றி க்ஷீணமடைந்த விஷயத்தை அறிந்த கன தனவான்களின் முயற்சியால், காருண்ய கவர்னர் அவர்களால் பாடசாலை யொன்று, சென்ற 1925-வரு சென்னை, பான்தியன் (Panthean Road) ரோட்டில் ஸ்தாபிக்கப்பட்டது. அதில் சுமார் 120 பிள்ளைகள் வாசித்துக்கொண்டு வருகிறார்கள். மறு வருஷம் சேரவேண்டிய பிள்ளைகளுக்கும், அந்த பாடசாலையை அநுசரித்த சிகிச்சாசாலையை யேற்படுத்த இடமுமில்லையென்று வேறோரிடத்தை நாடினார்கள். அது டாக்டர்கள் பங்களாவென்று வதந்தியுலாவியது. அதுபோய், தற்காலம் பூந்தமல்லி ஹைரோட், ஹைட் பார்க்கில் (Hyde Park) இப்பாடசாலை ஸ்தாபிக்கப்பட்டுள்ளது. அந்தக்கட்டிடம் முன்னிருந்த கட்டிடத்தைப் பார்க்கிலும், குறைந்ததென்றே சொல்லலாம். அது பாடசாலைக்கும், சிகிச்சாசாலைக்கும் போதுமானதல்ல. இத்தகைய இடத்தை தேர்ந்தெடுத்ததற்கு சுகாதார நிலைமையே காரணமென்று சிலர் கூறுகின்றனர். இது எதுவரையில் உண்மையென ஆராய்ச்சி செய்யாதார் கூற்றேயாகும். இந்த இடத்தைச் சுற்றிலும் நான்கு புறத்தில் ரோட்டுகள் அமைந்திருக்கின்றன. மோட்டார் வண்டிகள், கிராம கட்டை வண்டிகள் சதா நடமாடக்கூடிய ரோடுகளாயிருக்கின்றன. அவைகளினின்று கிளம்பும் தூசுக்களே சுகதேகிகளையும், நோய்க்குட் படுத்தும். அந்நோய்களிலும் க்ஷயரோகாதிகளை அதிகப்படுத்துமென எண்ண இடமிருக்கின்றது.

படிக்கும் மாணவர்கள் தங்கத்தக்கவசதியும் அருகாமையில் கிடைப்பது அரிது. கன தனவான்களின் புத்திரர்களாயிருப்பின் அவர்களுக்குத் தகுந்த பங்களாக்களைச் சேகரிக்கலாம். ஏழை பிள்ளைகளாயிருப்பின், அவர்களுக்குத் தகுந்த வசதி கிடைப்பது அருமையிலுமருமை. இதையுணராது இவ்விடத்தில் அமைத்ததற்குக் காரணம், இன்னவென்று விளங்கவில்லை. சென்னையின் வடக்கு, கிழக்கு, தெற்கு கோடிகளில் (அதாவது வண்ணாரப்பேட்டை, தண்டையார்பேட்டை, முத்தையால் பேட்டை திருவல்லிக்கேணி, மைலாப்பூர், தேனும்பேட்டையில், வசிக்கும் மாணவர்கள் ஒரு நாளைக்கு இருமுறை பாடசாலைக்குச் செல்லவும், திரும்பவும் எவ்வளவு சாத்தியமாமென்பதை எண்ணினாலே போதும். மாணவர்களுக்கு தக்கவசதியுடன் அமைக்கப்படுவதன்றோ, அதிகாரிகளுக்கு ஏற்றதாகும். டிராம் அல்லது மோட்டார்பஸ் வசதியும் சரியாய் அமைக்கப்படாத இடமாயிருக்கின்றது. இரண்டொரு மோட்டார்பஸ் அவ்வழிச் செல்வதாயிருப்பினும் அதில் இடங்கிடைப்பது அருமையிலுமருமை.

இப்பாடசாலையில் கற்கும் மாணவர்கள் நோய்களுக்குகந்த சிகிச்சைகளைச் செய்து நோயாளிகளைச் சுகப்படுத்தும் அரியஞானத்தை அடைவதற்கு சிகிச்சாசாலையே சிறந்தது. அத்தகைய சிகிச்சாசாலை, வெகு ஜனங்கள் நடமாடக்கூடிய இடத்தில் அமைக்கப் பட்டிருப்பின், பலவகைப்பட்ட நோயாளிகள் சிகிச்சாசாலைக்கு வருவதால் அதற்குத்தகுந்த சிகிச்சைகளைச் செய்யும் அறிவைப் பெறுவார்கள். அவ்வாறின்றி தனவான்கள் சூழ்ந்துள்ள இடத்தில் சிகிச்சாசாலையமைக்கப்படின், அவ்விடத்திலுள்ள தனவான்கள் சிகிச்சைப் பெறவருவார்களா? அவர்களில் பெரும்பான்மையோர் நவீன வைத்தியத்தில் நாட்டமுள்ளவர்கள்; சுதேச வைத்திய மென்றால், அத்தகையினருக்கு நெடு நாற்றம். அதைச்சுற்றிலும் ஏழை ஜனங்கள் இல்லை. வைத்தியசாலையை நாடக்கூடிய ஏழை ஜனங்கள் அமிஞ்சிகரை, கீழ்பாக்கம், மேடவாக்கம், பிரம்பூர் இடங்களில் வசிக்கின்றார்கள். அவ்விடங்களிலிருந்து வரக்கூடுமென்றாலும் அவர்களுக்கும் 2 மைல் தூரம் நடந்தே வரவேண்டியிருக்கின்றது. ஆங்காங்கு அவர்களுக்குகந்த வைத்தியசாலை அருகாமையிலிருக்க அவைகளை விட்டு இதை நாடுவது கஷ்டம். ஜனங்களுக்காவது மாணவர்களுக்காவது. இதனால் ஏற்படும் நன்மையாது? நன்மையில்லையென்றே புலப்படுவதுடன் பாடசாலையின் நிலைமை எங்ஙன முடியும் என்கிற சங்கை உண்டாகின்றது. ஏனெனில் சிகிச்சைசாலைக்கு ஏராளமாக ஜனங்கள் வந்தால், மாணவர்களின் அறிவும் விசாலப்படும். அன்னியநாட்டு வைத்திய முறையில் சுகமடையாத நோயினர்கள், சுதேசமுறையில் சுகம் அடைகின்றார்களா இல்லையா என்கிற தாரதம்மியத்தையடையவும், இந்தியரிஷி, சித்தாதிகளால் வெளியிட்டுள்ள அரியபெரிய சிகிச்சைகளின் பெருமை வெளிப்படவும் இடமுண்டாகும். பலஜனங்கள் சிகிச்சைபெறக் கூடாத இடத்தில் அமையப்பெற்ற சிகிச்சைசாலையில் மேற்கூறிய அரியவிஷயம் வெளிவர இடமிராது. காலக்கிரமத்தில் இப்பாடசாலையினாலும் இச்சிகிச்சை சாலையினாலும் யாதொருபலனும் இல்லையென்றே பலர் கருத இடங்கொடுக்கும்.

இது உண்மையில் நிலை நிற்க வேண்டுமானால் இது நாளுக்குநாள் ஓங்கிப் பயிராகி சிறப்படையக்கூடியதும் வெகுஜனங்கள் நிறம்பிய இடத்திலேயும் அமைப்பது சாலவும்நன்றாகும்.

பா. கோவிந்தராஜ முதலியார்.

---

## சமத்துவ ஊழியன்.

ஓர் சிறந்த தேசீயத் தமிழ் மாதப் பத்திரிகை

அதிகாரமும், அகங்காரமும், பணத்திமிரும், ஜாதி இறுமாப்பும் படைத்துள்ளவர்களின் அக்கிரமங்களைக் கண்டித்துத் திருத்திப் பாரத உலகத்திலே சமத்துவத்தைநிலை நாட்டுவான் பொருட்டு போராடுவதற்கென, அக்ஷய-வரு சித்திரை-மீ 1-வ. யிலிருந்து வெளிவருவது; ஒவ்வொரு தமிழ் மக்களாலும் ஆதரித்துப் போற்றத்தக்கது,

வருடசந்தா தபாற்செலவுடன் ரூ. 2.

வீ. அருணசலம்,

நெ. 52. செட்டித் தெரு, கொளும்பு.

---

## இந்தியர் கஷ்ட நிவாரண பாங்கு "லிமிடெட்." கோயமுத்தூர்.

காப்பு திரவியம்—ரூ. 2,706.

| | |
|---|---|
| மூல திரவியம் — | ரூ. 5,00,000. |
| வெளிவிடப்பட்டது — | ரூ. 69,100, |
| வசூலிக்கப்பட்டது — | ரூ. 43,890. |
| டிபாசிட்டுகள் | ரூ. 62,580-1-0. |

டிபாசிட்டுகள் அடியிற்கண்ட வட்டி வீதத்திற்கு பெற்றுக்கொள்ளப்படும்.

**சேவிங்ஸ் பிக்செட் டிபாசிட்டு**

இரண்டு வருஷ, கெடுவு வட்டி.

100-க்கு மாதம் 1-க்கு ரூ. 0—10—0

வருஷம் 1-க்கு வட்டி ரூ. 7—8—0

இதற்கு பிரதி மாதமும் வட்டி கொடுக்கப்படும்.

**பிக்செட் டிபாசிட்டு.**

ஒரு வருஷ கெடுவு, வட்டி.

100-க்கு மாதம் 1-க்கு ரூ. 0—9—0

வருஷ 1-க்கு வட்டி ரூ. 6—12—0

இதற்கு வட்டி 6-மாதங்களுக்கொருமுறையாவதும் வருஷத்திற் கொருமுறையாவதும் வட்டிகொடுக்கப்படும்.

ஷை பாங்கானது ஆரம்பிக்கப்பட்டு ஒரு வருஷ காலமாக ஒழுங்காக நடந்து வருகிறது. நாளது 10-2-26-உ வருஷாந்திரக் கூட்டமும் நடைபெற்றது. இப்பாங்கானது கோயமுத்தூரில் உள்ள இம்பீரியல் பாங்கை தவிர்த்து மற்ற பாங்குகளைப்போல் 100-க்கு நாள் 1-க்கு ஒரு அணாவும், அதற்கும் அதிகமாகவும், அதிகவட்டி வாங்காமலும், புதிய விதிகளுடனும் குறைந்த வட்டிக்கு (அதாவது 100-க்கு, 0—12—0. 1—0—0) ரூபாயிக்கு எவ்வகையிலும் அதிகப்படாமல் ஏழை ஜனங்களுக்கு அநேக சௌகர்யமாகவும் இருப்பதோடு, குறைந்த பங்குகளினாலேயும் மானேஜிங் டைரெக்டர், அவர்களுடைய திறமையினாலும், முயர்ச்சியினாலும், பங்குக்காரர்களுக்கு முதல் வயதிலேயே 100-க்கு ஒரு ரூபாய் வட்டி கொடுக்கப்பட்டிருப்பதுவும் தவிர ரிசர்வு பண்டு. ரூபாய் 2,706 சேர்ந்திருக்கிறது. நாளதுவரை யாதொரு போக்குக்குத்தியில்லாமலும் இருப்பதிலிருந்து மானேஜிங் டைரெக்டருடைய தீர்க்காலோசனையும், பாங்கின் நல்ல ஸ்திதியையும் காட்டுகிறது. மேலும் அதிகமான பங்குகள் சேர்ந்து ஏராளமான லேவாதேவி நடந்தால் இப்போது கிடைத்த இலாபத்தைவிட அதிக இலாபம் கிடைக்குமென்றும், ஏழைகளுக்கும் பெரிய உபகாரமாக இருப்பதற்கும் கடவுள் கிருபை செய்வாராக.

சுபம்! சுபம்!! சுபம்!!!

குறிப்பு:—

இந்த பாங்குக்கு ஏற்பட்டிருக்கும் டைரக்டர்கள் ஒவ்வொருவரும் தனித்தனி சொந்த பாங்கு நடத்தக்கூடிய சக்தி வாய்ந்த பெரிய பெரிய தனவந்தர்களாகவும், அமையப் பெற்றிருப்பதால் யாவரும் தங்களிடமுள்ள திரவியத்தை டிபாஸிட்டாகவும் பங்குத் தொகைக்காகவும் இப்பாங்குக்கு அனுப்பி உங்களுடைய பணத்திற்கு யாதொரு நஷ்டமின்றி வட்டியுடன் பெற்றுக்கொள்வதோடு, உங்களுடைய திரவிய சகாயத்தினாலும், ஏழைகளுக்கும் சகாயம் செய்த பாக்கியமும் அடைவீர்கள் என்பதற்கு யாதொரு தடையுமில்லை.

ஜி.ராமச்சந்திர செட்டி,

31—5—26. மானேஜிங் டைரக்டர்

# மின்சார ரசம்

## எல்லா வியாதிகளுக்கும் தேவாமிர்தம் போன்றது

**மின்சார ரசத்தின் குணம் எப்படி?**

இது ஒரு அபூர்வமான சஞ்சீவி. இதற்கு இயற்கையாகவே ஒரு வித மின்சார சக்தியுண்டு. எந்த வியாதிக்கும் துளிகள் கணக்கில் உபயோகித்து நிமிஷக் கணக்கில் குணமடையலாம். பாஷாண சம்பந்தமான சரக்குகள் இதில்கிடையாது.

**மின்சார ரசத்தின் விசேஷமென்ன?**

மனிதர்களுக்கு வரும் எல்லா வியாதிகளையும் இந்த ஒரே மருந்து வெகு ஆச்சரியகரமாக குணப்படுத்துகிறது. உள்ளுக்கும் மேலுக்கும் இந்த ஒரே மருந்தை உபயோகிக்கலாம். எந்த விதமான அனுபானமுமில்லை. எவ்வித பத்தியமுமில்லை. பால்யர் முதல் விருத்தாப்பியர் வரையில் ஸ்திரீகள் உள்பட எல்லோரும் எக்காலத்திலும்பயமின்றி உபயோகிக்கலாம்.

**மின்சார ரசத்தின் அனுபோகம் எப்படி?**

கை கண்ட மருந்து. ஆயிரக்கணக்கான ஜனங்கள் இதை தினந்தோறும் இந்தியாவிலும் வெளி நாடுகளிலும் உபயோகித்து வருவதே இதற்கு போதுமான சாக்ஷியாகும். வாங்கினவர்களே பலமுறை ஆர்டர் தருகிறார்கள்.

ஒரே முறை பரீக்ஷியுங்கள்! அநேக நற்சாக்ஷிப் பத்திரங்கள் அடங்கிய ஜாபிதா கேட்பவர்களுக்கு இனமாக அனுப்பப்படும். இன்றைக்கே எழுதுங்கள்.

**ஒரு புட்டியின் விலை ரூ. 2. தபால் செலவு வேறு.**

## மின்சார ரசம் கம்பெனி லிமிடெட், சேலம். (S. I.)

தந்தி விலாசம்:—'Rasamco', Salem.

இங்கிலீஷ் படிக்க அவலுடன் எதிர்ப்பார்த்திருந்த அன்பர்களே! என் நீங்கள் கவலைப்படுகிறீர்கள்!!

23000 ஜனங்களுக்கு ஆங்கிலம் விரைவில் கற்றுகொடுத்தது

7-ம் பதிப்பு] இப்புத்தகம் ஒன்றேதான்!!! [7-ம் பதிப்பு

7000-பக்கங்கள் கொண்ட முழு கலிகோ பயிண்டு புத்தகம் விலை ரூ. 2. ஸ்ரீராமர் சீதா திருக்கலியாண படமும், பட்டாபிஷேக ஆட்டோன் படமும் உள்ளது.

## "ஆங்கில ஆசான் அல்லது போதினி"

எமது ரிஜிஸ்டர்ட் "லேடி டிரேட் மார்க்கு" போட்டிருக்கும் புஸ்தகம் பார்த்து வாங்குங்கள்!

மோசம் போகாதீர்கள்.




தமிழ் தெரிந்தவர்கள் ஆங்கில பாஷையை ஆசிரியர் இல்லாமலே அதி சீக்கிரத்தில் பணச் செலவின்றி சுயமாகவும், சுலபமாகவும் கற்றுக்கொள்ளலாம். உலக அனுபவத்திற்கு வேண்டிய பல விவகாரங்களின் பதங்களைப் படிப்படியாக நூதனமான முறைகளுடன் வெளியிடப்பட்டிருக்கிறது. கிராம முன்சிப், கர்னம், கான்ஸ்டேபில்கள், கங்காணியர்கள், பட்லர்கள் முதலிய எல்லா தொழிலாளர்களுக்கும் மிகவும் முக்கியமானது.

23000-காப்பிகள் இது வரையில் செலவழிந்திருப்பதே இதன் பெருமையையும் இன்றியமையா உபயோகத்தையும் விளக்கிக்காட்டும். எல்லா ஊரிலும் எல்லா புத்தக ஷாப்பிலும் கிடைக்கும். எல்லா விடங்களிலும் ஏஜண்டுகள் தேவை.

**தி. இராஜகோபால் முதலியார்,**

302, தங்கசாலைத் தெருவு, மதராஸ்.

குடியர்களை குணமாக்கும் அற்புத

## "விக்கோரின்"

"விக்கோரினை" எந்தப் பானத்திலும் கலந்து குடிகாரருக்கும் அபினி தின் போருக்கும் தெரியாமல் கொடுத்து வருவதில் குடியையும் அபினையும் ஆயுளுள்ளவும் விட்டு விடுகிறார்கள். பரீட்சைக்கும் பலனுக்கும் உத்தரவாதம். கடந்த 12 வருஷங்களாக ஏராளமான நற்சாட்சிகள் பெற்றது. பத்தியமே கிடையாது. 12, 18, 25 வருஷக் குடியருக்கு ஒரே புட்டி போதுமானது. தேகத்திற்கு எவ்விதமான கெடுதியும் செய்வதேயில்லை. குடியர்கள் தெரிந்தும் "விக்கோரினை" சாப்பிடலாம்.

40-நாள் "விக்கோரின்" விலை ரூபாய் மூன்று.

ஆங்லோ இண்டியன் டிரக்கஸ் கம்பெனி,
கோயமுத்தூர், தென் இந்தியா.

இனம்! இனம்!!

## ரகஸ்யரத்னம்

அல்லது

வாழ்க்கை நலம் புகட்டும் நூல்.

வைத்திய அனுபவங்கள், வாழ்வின் மர்மங்கள், இரகசியக் குறிப்புக்கள், விவாகமானோர் அறிய வேண்டிய விஷயங்கள், பெண்களின் சம்பந்தமான பலவகை விவரங்கள் இல்லற சார சங்ரகம் ஆகிய பலவும் அடங்கியது.

விலை இல்லை; தபாற் செலவு இல்லை. விலாசம் தெரிவித்தால் மறு தபாலில் அனுப்பி வைக்கிறோம்.

அமிர்தம் அண்டு கோ.,
தபாற் பெட்டி 222, மதராஸ்.


கோயமுத்தூர் ஸ்டார் பிரஸ் (லிமிடெட்) ஈரோடு பிராஞ்சு பிரசில் அச்சிடப்பெற்று சா. இராமசாமி நாயக்கரால் வெளியிடப்பட்டது.